# ஐக்கிய அரசு

மலர்-1 இதழ்

நவம்பர் + டிசம்பர் - 1934.

JL
VINM,N34K:
N34.1.11812
148734.

# ஐக்கிய அரசு

## (Co-operative Commonwealth)

MONTHLY ORGAN OF

THE YOUNG CO-OPERATORS' LEAGUE

மலர் 1. நவம்பர் & டிசம்பர். இதழ் 11 & 12.

(188)

பொருளடக்கம்.

| | | பக்கம். |
|---|---|---|
| 1. | கூட்டுறவு இயக்கத்தில் வருணாசிரம தர்மமா? ... ... | 1 |
| 2. | தமிழ்நாடும் குடிசைத்தொழிலும் ... ... | 5 |
| 3. | தென்னாட்டில் கூட்டுறவு இயக்கம் ... ... | 13 |
| 4. | விவசாயிகளின் நெருக்கடியான நிலைமை ... | 16 |

காரியாலயம் :

29, கீழ ஆண்டார் வீதி,

தெப்பக்குளம், திருச்சினாப்பள்ளி.

1934

# "ஐக்கிய அரசு"

போஷகர் :
டாக்டர் ஏ. மதுரம், புத்தூர், திருச்சி.

சங்கத் தலைவர் :
வி. பாசுதேவ், B.A., B.L., M.L.C.,
பிரகம்ஸ் ரோட், எழும்பூர், சென்னை.

காரியதரிசி :
டி. பி. குருசாமி பிள்ளை,
18, தென்னூர் ரோட், புத்தூர், திருச்சி.

கௌரவ ஆசிரியர் :
எஸ். ஜே. ரெத்தினசாமி, M.A., B.L., வக்கீல்,
பட்டர் ஒர்த் ரோட், தெப்பக்குளம், திருச்சி.

நிர்வாக ஆசிரியர் :
என். எஸ். கேஜலிங்கசாமி,
மண்ணச்சநல்லூர், திருச்சிராப்பள்ளி.

| சந்தா விபரம் | | விளம்பர விகிதம் | |
|---|---|---|---|
| உள்நாடு வருடம் 1-க்கு | ரூ. 5—0—0. | 4-வது பக்கம் அட்டை | ரூ. 30—0—0. |
| வெளிநாடு ,, | ரூ. 6—0—0. | 3-வது பக்கம் அட்டை | ரூ. 25—0—0. |
| முன் பணமின்றி பத்திரிகை அனுப்பப்படமாட்டாது. | | சாதாரண விளம்பரப் பக்கமொன்று | ரூ. 20—0—0. |
| 10 பத்திரிகைகளுக்கு சந்தாதார்களைச் சேர்த்து அனுப்புவோருக்கு ஓர் பத்திரிகை அனுப்பப்படும். | | முன் பணமின்றி விளம்பரம் ஏற்கப்படமாட்டாது. விளம்பரத்தை அங்கீகரிக்கவோ மறுக்கவோ மானேஜருக்கு உரிமையுண்டு. | |

ஐக்கிய அரசு
(CO-OPERATIVE COMMONWEALTH)
STANDS FOR
BETTER FARMING, BETTER BUSINESS, BETTER LIVING.

1934 நவம்பர் & டிசம்பர் திருச்சி

## கூட்டுறவு இயக்கத்தில் வருணாசிரம தர்மமா?

கூட்டுறவு ஸ்தாபனங்களான யூனியன்கள், பாங்குகள், பெடரேஷன்கள் முதலியவற்றில் சூபர்வைசர்களாகவும், குமஸ்தாக்களாகவும் சேவைபுரிவோருக்கும், கூட்டுறவு இலாகாவில் சேவைபுரிவோருக்கும் பயிற்சி அளிப்பதற்கென தமிழ்நாட்டில் கோவை, வேலூர், தஞ்சை ஆகிய இடங்களில் மூன்று கல்லூரிகளும், ஆந்திர தேசத்தில் மூன்று கல்லூரிகளும் இருந்துவந்தன. சென்னை சர்க்கார் வெளியிட்டுள்ள ஆகஸ்ட்-மீ 2-உ. அறிக்கையின்படி தமிழ்நாட்டிலும், ஆந்திர தேசத்திலும் இருந்துவந்த ஆறு கல்லூரிகளையும் எடுத்துவிடுவதென்றும், தமிழ்நாட்டிலும், ஆந்திர தேசத்திலும், கல்லூரிகள் இருந்த மூன்று இடங்களிலும் ஒவ்வொரு முறை மாறி மாறி பயிற்சி அளிப்பதென்றும், அத்தகைய பயிற்சி உத்தியோகப்பற்றற்ற கூட்டுறவு ஸ்தாபனங்களில் சேவைபுரிவோர்களுக்கேயென்றும், சர்க்கார் கூட்டுறவு இலாகாவில் சேவைபுரியக் கூடியவர்களுக்கு சென்னையில் மத்திய கூட்டுறவுக் கல்லூரி அமைக்கப்படுமென்றும் தெரிகிறது. இந்த ஏற்பாட்டின்படி மத்திய கூட்டுறவுக் கல்லூரி அமைக்கப்படுவது திண்ணம்.

தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் கோவை, வேலூர், தஞ்சை ஆகிய மூன்று இடங்களில் மாத்திரம் மாறிமாறி கூட்டுறவுப் பயிற்சி அளிப்பதைவிட ஒவ்வொரு ஜில்லாவிலும் தலை நகரங்களில் கூட்டுறவுப் பயிற்சி அளிக்கவேண்டியது மிகவும் அவசியம் என்போம். அதிலும் திருச்சி போன்ற நகரத்தில் கூட்டுறவுப் பயிற்சி அளிக்கவேண்டியது மிகவும் அவசியமெனக்கூறுவோம். திருச்சியில் மாத்திரம் கூட்டுறவுப் பயிற்சி அளிக்கப்படுமாயின் ஏராளமான மாணவர்கள் பயிற்சி பெறுவர் என உறுதியாகக் கூறுவோம்.

நிற்க, மத்திய கூட்டுறவுக் கல்லூரி திறவப்படுவதை நாம் வரவேற்கிறோம். எனினும், இக்கல்லூரி திறவப்படுவதின் மூலம் கூட்டுறவு இயக்கத்தில் வருணாசிரம தர்மத்தைப் புகுத்த சர்க்கார் முற்பட்டதை நினைக்க வருந்துகிறோம். மத்திய கூட்டுறவுக் கல்லூரியில் அளிக்கப்படும் கல்வி கூட்டுறவு இலாகாவில் உத்தியோகம் பெறுவோர்களுக்கேயன்றி ஏனைய கூட்டுறவு ஸ்தாபனங்களில் உள்ளவர்களுக்கல்லவென்பதும், கோவை, வேலூர், தஞ்சை முதலிய இடங்களில் பயிற்சி பெறுவோர் கூட்டுறவு இலாகாவில் பதவி அளிக்கப்படமாட்டார்களென்பதும் ஏற்கத்தக்கதல்ல. ஒரு இயக்கத்தைப் போட்டி சேவை புரியக்கூடியவர்களை பயிற்சி அளிப்பதில் இரண்டாகப் பிரித்து உயர்வு தாழ்வு கற்பிப்பது பெருந்தவறாகும். கோவை, வேலூர், தஞ்சை முதலிய இடங்

களில் பயிற்சி அளிக்கப்படுவதை நிறுத்தி மத்திய கூட்டுறவுக் கல்லூரியிலேயே சகலரையும் பயிற்சி பெறச்செய்வது நலம். அவ்வாறு செய்தால்தான் சூப்பர்வைசர்களாகக் கூட்டுறவு ஸ்தாபனங்களில் இருக்கக் கூடியவர்கள் கூட்டுறவு இலாக்காவின் முதற்படியையாவது மிதிக்க முடியும். அவ்வாறின்றி பயிற்சி அளிப்பதில் பாகுபாடு செய்யப்படுமாகில் அதைக் காட்டிலும் அவர்களது முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை வேறொன்றுமில்லை. சூப்பர்வைசர்கள்தான் கூட்டுறவு இயக்கத்திற்கே கற்றாண்களாக விளங்குகிறார்கள். வெய்பலென்றோ, மழை என்றோ, காற்றென்றோ பாராது கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கென அரும்பாடுபட்டுவருவோர் சூப்பர்வைசர்கள் என்பதை எவரும் மறுக்க முடியாது. அத்தகையோர் நிலைமை மிகவும் பரிதாபகரமானது. இன்றையதினம் கூட்டுறவு இலாக்காவில் டிப்டி ரிஜிஸ்திரார்களாக இருக்க அருகதையுடைய சூபர்வைசர்கள் பலர் இருப்பதை நாம் அறிவோம். அதுபோல் ஓர் கூட்டுறவு யூனியனுக்குக் குமாஸ்தாவாக இருப்பதற்குக்கூட அருகதையற்ற சப்[illegible]கள் கூட்டுறவு இலாக்காவில் இருக்கிறார்கள் என்பதையும் நாம் கூறத்தயங்கோம். அறிவும், ஆண்மையும், அனுபவமும் நிறைந்த சூப்பர்வைசர்கள் மண்குடத்தில் வைத்த விளக்குகள் போன்று மங்கி இருக்கின்றனர். அத்தகையோரை கூட்டுறவு இலாக்காவிற்கு தேர்ந்தெடுப்[illegible] கூட்டுறவு இலாக்காவில் சேவைபுரிவோர் பிரத்தியேகப் பயிற்சி பெறுதல் வேண்டுமென்பது சூப்பர்வைசர்கள் உயர்பதவி பெறுதிருக்கச்செய்வதேயொழிய வேறொன்றுமில்லை என்போம். எனவே, சர்க்கார் கூட்டுறவு இயக்கத்தை இரண்டு பண்ணுவதை விட்டொழித்து புதிய வருணசிரமத்தைப் புகுத்தாது கூட்டுறவுக் கல்வி அளிப்பதில் உத்தியோகப் பற்றற்ற கூட்டுறவு சிப்பந்திகளுக்கும், கூட்டுறவு இலாக்கா சிப்பந்திகளுக்கும் தாரதம்மியமின்றி ஒரே விதமான கல்வி அளிக்கவேண்டுமென விரும்புகிறோம். சர்க்கார் இது குறித்து புனராலோசனை புரிவார்களென எதிர்பார்க்கிறோம்

## கூட்டுறவாளர்களே! கேளுங்கள்.

மதுரை—ராமநாதபுரம் ஜில்லா மகாநாட்டில் ராவ்பகதூர் டி. வ. ராமலிங்கம் செட்டியார் அவர்கள் நிகழ்த்தியுள்ள சொற்பொழிவை பிறிதோரிடத்தில் வெளியிட்டுள்ளோம். அதனை ஊன்றி வாசிக்குமாறு நமது வாசகர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம். திரு. செட்டியார் அவர்களது சொற்பொழிவை ஆழ்ந்து கவனிப்போர் அதில் பொறுக்கு மணிகள் பல நிறைந்துள்ளதைக் காணலாம். மேலும், சாதாரணமாக மேடையில் பேசுவோர் பேச்சுக்கும் திரு. செட்டியார் அவர்கள் பேச்சுக்கும் பெரும் தாரதம்மியமுண்டு. மேடையில் பேசுபவர்கள் யாவரும் பேசுகிறபடி நடப்பவர்களன்று. திரு. செட்டியார் அத்தகையோர் இனத்தைச் சேர்ந்தவரல்ல. மேடையில் பேசுபவர்களெல்லாம் அனுபவத்தில் கண்டுள்ள உண்மைகளைக் கூறுகிறார்கள் என்பதற்கில்லை. அநேகமாக பெரும்பாலோர் ஏட்டுச்சுரைக்காய்களாகவே விளங்குகின்றனர். பள்ளி மாணவர்கள் பரீட்சைக்குச் செல்லுமுன் பாடங்களை மனப்பாடம் செய்து பேனுமுனை தேயும் வரையில் எழுதி விட்டு வருவதுபோல் மேடை ஏறிப்பேசுவோர் பெரும்பாலும் பள்ளி மாணவர்களைப்போன்று மனப்பாடம் செய்தவற்றை பொது மேடையில் கக்கக்கூடுமேயன்றி வேறல்ல. ஆனால் திரு. செட்டியார் தமது அனுபவத்தில்கண்ட உண்மைகளை சகலரும் பயனடையும் வகையில் பேசக்கூடிய நிபுணர். திரு. செட்டியார் அவர்களிடம் நமக்கு மிகுந்த பொறாமை உண்டு. அதற்குக் காரணமில்லாமலுமில்லை. தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவாளர்களில் திரு. செட்டியார் இளமையும், செல்வமும், சர்வகலாசாலை சட்ட கலாசாலைப்பட்டமும், பெற்றவராக உள்ளார். திரு. செட்டியாரைப் போன்று இம்மூன்று அம்சமும் பொருந்திய

148734

VINmN34 N34



கூட்டுறவாளர்கள் திருச்சி ஜில்லாவில் இல்லாமல் இல்லை. ஆனால், திரு. செட்டியார் அவர்களுக்கு கூட்டுறவு இயக்கத்திலுள்ள அக்கரையும், ஆர்வமும், உற்சாகமும் திருச்சியிலுள்ள "கூட்டுறவாளர்கள்" என்பவர்கள் எவருக்கும் இல்லை என்பதைத் துணிந்து கூறுவோம். காலியாகவுள்ள தலைவர் ஸ்தானத்தை எல்லாம் நிரப்ப வேண்டுமென நினைப்போரும், உற்றார் உறவினருக்கு உத்தியோகம் வாங்கிக்கொடுக்க விழைவோரும், நயவஞ்சகமாக பாங்கைத் தகராறுகளில் இழுத்துவிட்டு கொள்ளை அடிப்பதே கண்ணாக இருப்போரும், பாங்கின் சொத்தை தமது பிதுர்ராஜ்ஜிய சொத்தாக எண்ணுவோரும், பாங்கின் சிப்பந்திகளை தங்களின் பண்ணை ஆட்களாக மதிப்போரும், திருச்சியில் மலிந்து கிடக்கிறார்கள் என்பதைத் துணிந்து கூறுவோம். இக்கோஷ்டியார் திரு. ராமலிங்கம் செட்டியாரைப் பின்பற்றுவார்களாகில் அன்று முதல் திருச்சி ஜில்லாவில் கூட்டுறவு இயக்கத்திற்கு புதிய சகாப்தம் எனலாம்.

நிற்க, திரு. செட்டியார் அவர்களின் சொற்பொழிவின் சில பகுதிகளை கவனிப்போம். சமரச கடன் பைசல் போர்ட் இம்மாகாணத்திற்குத் தேவை என்பது திரு. செட்டியாரின் அபிப்ராயம். அதை முன்னிட்டு அவர் சென்னை சட்டசபையில் சமரசக்கடன் பைசல் மசோதா ஒன்றைக்கொண்டு வந்துள்ளார். நமது மாகாணத்தில் கடன் பட்டு அவதிப்படுவோர் எண்ணிக்கை பெருகிக்கொண்டே போகிறது. சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்னர் பெரிய மனிதர்களென இருந்தவர்களெல்லாம் இன்று அன்னக்காவடிகளாகவே விளங்குகிறார்கள். பெரிய இடத்துப் பிள்ளைகள் என்பவர்களெல்லாம் இது காலை வண்டிக்காரர்களாகவும், சமையல் காரர்களாகவும், வெற்றிலைப்பாக்குக் கடைக்காரர்களாகவும், போகவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். 15 ஆண்டுகளுக்குள்ளாக ஒருவர் கையைவிட்டு மற்றொருவர் கைக்கு மாறிய நிலம் வீடுகள் எவ்வளவு என்பதை ரிஜிஸ்திரார் ஆபீஸிலிருந்து கணக்கெடுத்தால் இவ்வுண்மை விளங்கும். இம்முறையில் இம்மாகாணத்தின் கடன்சுமை எவ்வளவென்பதை சென்னை மாகாண பாங்கிங் விசாரணைக் கமிட்டியார் தமது யாதஸ்தில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார்கள். அதாவது:—

"1930-ல் இம்மாகாண வாசிகளின் கடன் சுமை 150 கோடி ரூபாய். அதில் பெரும்பான்மையாகக் கடன் பட்டோர் விவசாயிகளே. கிருஷிகளின் கடன்பளுவைக் குறைக்க என்ன செய்யலாம் என்பது குறித்து சர்க்கார் கவனஞ் செலுத்தலாயினர். சமரச கடன் பைசல் போர்ட்கள் நியமிப்பது சரியா, அல்லது கூட்டுறவு நாணய பாங்குகள், நிலஅடமான பாங்குகள் முதலியவற்றைக்கொண்டு ஏதாவது பரிகாரஞ் செய்வது சரியா என்பது ஜாக்கிரதையாக ஆழ்ந்த யோசனை செய்து ஓர் முடிவுக்குவர வேண்டியதாகும்"

ஆஸ்திரேலியா முதலிய நாடுகளில் சமரசக் கடன் பைசல் போர்ட்கள் திருப்திகரமாக வேலை செய்துவருகின்றன. மத்திய மாகாண சர்க்கார் சமரசக்கடன் பைசல் போர்ட்களை நிறுவியுள்ளனர். ஆனால் மாகாண பாங்கிங் விசாரணைக் கமிட்டியார் சமரசக் கடன் பைசல் போர்ட் நிறுவது குறித்து திட்டவட்டமான அபிப்ராயம் எதுவும் கூறவில்லை. கடன் பளுவைக் குறைக்கக் கூட்டுறவு நாணய பாங்குகளோ, நிலஅடமான பாங்குகளோ பரிகாரஞ் செய்ய முடியாதென்றே நாம் கூறுவோம். திரு. செட்டியார் அவர்கள் கோவை ஜில்லா மத்திய கூட்டுறவு பாங்கின் தலைவராகவும், சென்னை மாகாண மத்திய நிலஅடமான பாங்கின் உபதலைவராகவும் இருந்தும் அவரே சமரசக்கடன் பைசல் மசோதாவை சென்னை சட்டசபையில் புகுத்தியுள்ளாரென்றால், கடன் சுமையைக் குறைக்க கூட்டுறவு நாணய பாங்குகளும், நில அடமான பாங்குகளும் பரிகாரஞ் செய்ய முடியாதென்ற முடிவுக்கு அவர் வந்துள்ளாரென்றே கூறவேண்டும். திரு. செட்டியார் ஆழ்ந்த யோசனையின் மீது கொண்டு வந்துள்ள மசோதா சாமான்யமாக அலட்சியம் செய்யத் தக்கதல்ல. மேலும், இம்மசோதா ஆபத்தானதுமன்று. கடன் கொடுத்தோர், கடன் பட்டோர் இருவர் நலத்தையும் பாதுகாக்கும் முறையில் தான் இம்மசோதா தயாரிக்கப்பட்டிருக்கிறது. அங்ஙனமிருக்க சர்க்கார் காலதாமதம் செய்வது

என்? இம்மசோதாமாத்திரம் நிறைவேறுவிடில் தற்போது நம் நாடுள்ள நிலைமையில் கடன் மறுப்பு இயக்கம் தோன்றக் கூடுமோ என அஞ்சுகிறோம். அத்தகைய இயக்கம் தோன்றுமாகில் திரு. செட்டியார் அவர்கள் மசோதாவால் ஆபத்து ஏற்படக்கூடுமோவென எதிர்பார்ப்பதைவிட பெரிய ஆபத்து நம்நாட்டில் எழக்கூடும் என்பதை சர்க்கார் உணர்ந்து சமரசக்கடன் பைசல் போர்டுகள் நிறுவும் திட்டத்துடன் கூடிய மசோதாவை சட்டமாக்குவார்களென நம்புகிறோம்.

அடுத்தபடியாக, நிலஅடமான பாங்குகள் விருத்தி அடைந்துவருவது குறித்து திரு. செட்டியார் திருப்தியடைந்துள்ளார். ஆனால், நிலஅடமான பாங்குகள் போதிய அளவு நாட்டில் பரவவில்லை என்றே கூறலாம். நம்நாட்டில் கூட்டுறவு இயக்கம் தோன்றிய காலத்தில் பிரதம நாணயச் சங்கங்கள் பதிவு செய்வதில் எவ்வளவு அக்கரை காட்டப்பட்டதோ அவ்வளவு தூரம் நிலஅடமான பாங்குகள் விஷயத்தில் அக்கரை காட்டப்படவில்லை என்றே நினைக்கிறோம். நிலஅடமான பாங்கினை அறியாத கிராம வாசிகளும், அதன் பெயரையே கேட்டிராத கிருஷிகளும் ஆயிரக்கணக்காக உள்ளனர். நிலஅடமான பாங்குகள் கிராமவாசிகளுக்குப் பயன்படத்தக்கதாக வேண்டுமானால் தாலுக்காக்கள்தோறும் ஓர் பாங்கு நிறுவப்படவேண்டும். தாலுக்கா பாங்குகள் யாவும் ஒன்றாக இணைக்கப்பட்ட ஓர் மத்திய ஸ்தாபனம் ஜில்லாக்கள்தோறும் நிறுவப்படவேண்டும். அந்த ஸ்தாபனம் நிலஅடமான பாங்குகளின் உதவியை நாடுமாறு கிருஷிகளிடம் பிரசாரம் செய்யும் பொறுப்பை ஏற்கவேண்டும். மேலும், நிலஅடமான பாங்குகள் என்பவற்றில் பதவி வகிக்கக் கூடியவர்கள் விவசாயிகளாக இருக்கவேண்டுமேயன்றி லேவாதேவி புரிவோர்களாக இருத்தல் கூடாது. நிலஅடமான பாங்குகளில் லேவாதேவி புரிவோர் பதவி வகிப்பின் அவர்கள் பாங்கின் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாக விளங்குவார்களேயன்றி அவர்களால் உதவி ஏற்படுமென எதிர்பார்ப்பதற்கில்லை. மேலும், நிலஅடமான பாங்குகளில், சென்னை மத்திய நிலஅடமான பாங்கு முதலாக, பிரதம பாங்குகள் ஈராக, காரியதரிசியாக இருப்பவர்கள் சர்க்காரால் நியமிக்கப்பட்ட நிரந்தரமாக பதவி வகிக்ககூடிய சம்பள ஊழியர்களாக இருக்கவேண்டுமேயன்றி கௌரவ காரியதரிசிகள் என்பவர்கள் இருத்தல் கூடாது. கௌரவ காரியதரிசிகள் என்பவர்கள் பூரா காலத்தையும் செலவழித்து வேலை செய்ய முடியாது. அவர்கள் தங்களது ஓய்வு காலத்தையே பாங்கின் வேலைக்கு உபயோககரமானதாகச் செய்யக்கூடும். அதனால் பாங்கின் வளர்ச்சி கெடுவது நிச்சயம். நிற்க, கௌரவ காரியதரிசிகள் என்பவர்களின் நிர்வாகமெல்லாம் ஊழல் நிறைந்துள்ளதென்பது சகலரும் அறிந்ததே எனவே, ஒரு தாலுக்காவை எல்லையாகக்கொண்ட பாங்கிற்கு பொறுப்பு வாய்ந்த நிரந்தரமான காரியதரிசி இன்றியமையாததாகுமென்போம்.

கணக்குகள் தணிக்கைபுரிவது குறித்து திரு. செட்டியார் கூறியுள்ள அபிப்ராயத்தை முழுமனதுடன் ஆதரிக்கிறோம். தணிக்கை புரிவதென்பது சர்க்கார் மேம்பார்வையில் இருப்பதே மேலென்போம். "கணக்கு தணிக்கை செய்வதில் சாதாரணமான சர்க்கார் அத்தாட்சி பெற்ற கணக்குப் பரிசோதகர்களைவிட கூட்டுறவு இலாக்கா கணக்குப் பரிசோதகர்கள் மேதாவிகளா? அங்ஙனமிருக்க கணக்குப் பரிசோதனை செய்யும் சுதந்திரத்தை பாங்குகளுக்கு என் கொடுக்கக்கூடாது? கணக்குப் பரிசோதனை விஷயத்தில் சர்க்கார் என் தலையிடவேண்டும்?" என்பது சிலரது அபிப்ராயம் சர்க்கார் அத்தாட்சி பெற்றவர்கள் கணக்குப் பரிசோதனை செய்வதில் புலிகளாக இருக்கக்கூடும். ஆனால் கூட்டுறவு இலாக்கா கணக்குப் பரிசோதகர்கள் தணிக்கை செய்வதற்கும், சாதாரண பரிசோதகர்கள் தணிக்கை செய்வதற்கும் ஒரு வித்தியாசமுண்டு. கூட்டுறவு இலாக்கா சிப்பந்திகள் வெளிச்சக்காரர்களாகவும், வாய் வீச்சுக்காரர்களாகவும், மேடை வீரர்களாகவும் உள்ளவர்களின் நிர்வாகத்தின் கீழுள்ள பாங்குகளில் தங்கள் கடமையைச் சரிவரச்செய்ய முடியும். ஆனால், சாதாரண கணக்குப் பரிசோதகர்கள் மேற்கண்ட ஆசாமிகளுக்குக் கையாட்களாகவே விளங்க முடியும். எனவே, கணக்குகள் ஜோடிப்பதற்கு இடமேற்படாமலிருக்கவேண்டுமானால் சர்க்கார் சிப்பந்திகள் தணிக்கை புரிவதே சிலாக்கியமென்போம்.



# தமிழ்நாடும் குடிசைத்தொழிலும்

## I

[திரு. ஏ. அரங்கநாத முதலியார் அவர்கள் அபிவிருத்தி இலாக்கா மந்திரியாக இருந்த காலத்தில் குடிசைத் தொழிலை பரிசீலனை செய்ய நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தர்கள் சிலருள் ஒருவரான திரு. டி. நாராயண ராவ் அவர்கள் சென்னை மாகாணத்தில் குடிசைத் தொழில்களின் நிலைமை சம்பந்தமாக யாதாஸ்து ஒன்று தயாரித்துள்ளார். அதில் தமிழ்நாடு சம்பந்தமான பாகத்தை நேநர் திரு. என். எஸ். சிவசுப்பிரமணியம் அவர்கள் மொழி பெயர்த்து தமிழ்நாடு கூட்டுறவு பெடரேஷனால் வெளியிடப்பட்டுள்ளது ]

விவசாயமே பெருந்தொழிலாக உள்ள நம் நாட்டில் விவசாயிகளுக்கு வருஷம் பூராவும வேலையிருப்பதில்லை. புஞ்சை விவசாயம் மழையை எதிர்பார்த்திருப்பதாலும் வருஷத்திற்கு ஐந்தாறு மாதங்களுக்கே வேலை கொடுப்பதாலும் புஞ்சை விவசாயிகள் வருஷத்தில் வெகு காலம் சோம்பித்திரியவேண்டும். நஞ்சை விவசாயிகளுக்கும வருஷம் பூராவும் வேலை இல்லை. நஞ்சை புஞ்சை விவசாயிகள் வருஷத்தில் நான்கு மாசம்முதல் எட்டு மாதம்வரை தங்கள் விவசாய வேலை இன்றியே இருக்கிறார்கள்.

விவசாயத்திலிருந்து உணவு கிடைக்கிறது. ஆயின் உயிர் வாழ்க்கைக்கு உணவு மட்டுமே போதுமானதன்று. வாழ்க்கைக்கு வேண்டிய உடையும் பிறவும் தயார் செய்யவேண்டியதாகின்றது. வேலை இல்லாத நேரங்களில் விவசாயிகள் தங்கள் காலத்தைக் கைத்தொழில் செய்வதில் செலவிடுகிறார்கள் விவசாயத்திலிருந்து கிடைக்கும் வருமானம் சிறிதளவாகவே இருப்பதால் இவ்வித தொழில்களிலிருந்தும் அவர்களுக்கு ஒரு வரவு வந்து அவர்கள் வருமானம் அதிகரிக்கின்றது.

இவ்விதம் வேலை செய்பவர்கள் தங்கள் கைத்தொழிலைத் தங்கள் வீடுகளிலேயே செய்கிறார்கள். அவர்கள் ஒரு முதலாளியிடமிருந்து கூலி பெற்றுக்கொண்டு அவனுக்காக குறிப்பிட்ட நேரங்களில் வேலை செய்வதில்லை குடிசைத் தொழிலில் ஆண் பெண், குழந்தைகள் முதலியவர்கள் பலரும் அவரவர் திறனளவு அத்தொழிலில் ஈடுபடுகிறார்கள்.

விவசாயத்திற்கும் கிராம வாழ்க்கைக்கும் இன்றியமையாத தொழிலாளர்களாகிய கொல்லர், தச்சர், குயவர் முதலியவர்களும குடிசைத் தொழில் செய்பவர்களே. இவர்களிலும் சிலர் விவசாயம் உடையவர்கள்.

பெரிய நகரங்களிலும் தொழிலாளருள் பலர் தங்கள் தங்கள் வீடுகளிலேயே தங்கள் கைத்தொழில்களைச் செய்கிறார்கள். பெரிய கைத்தொழில்கள் பெரும்பான்மை பட்டணங்களிலேயே இருக்கின்றன. நயமான வேலையும் வேலை மிக்க பொருள்களும் நகரங்களிலேயே பரவுகின்றன கைத்தொழில் பரந்து கிடக்கும் நாடுகளில் ஒரு பெரிய ஆலையில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் தினச் சம்பளத்திற்கு வேலை செய்கிறார்கள். இங்கிலாந்து முதலிய தொழில் மிகுந்துள்ள நாடுகளில் இம்முறையே அதிகம். குடிசைத் தொழில்முறை யந்திரசாலை முறைக்கு மாறுபட்டது. குடிசை முறையில் தொழிலாளிதான் முதலாளி. அவன் தன் சௌகரியத்தையும் இடத்தையும் அனுசரித்து வேலை செய்கிறான். அவன் வேலையில் கிடைக்கும் பூரா லாபத்தையும் அவனே அடைகிறான். யந்திரசாலை முறையில் பல்லாயிர மனிதர்களை ஓர் கூரையின் கீழ் அடைத்து வேலை வாங்குவதனாலும், லாபத்திலேயே கண்ணுயுள்ள முதலாளியின் சுயநலத்திலும் உண்டாகும் பல துன்பங்களும், குடிசைத் தொழில் முறையில் இல்லை. இக்குடிசைத் தொழில்கள் பல விதமாவன. அவை, பருத்தி நூல் நூற்பது, கம்பளி நெய்தல், தென்னை, பனை, கத்தாழை முதலிய நார் திரித்தல், துணி நெய்தல், பட்டு நெய்தல், சாயம் போடல், இரும்பு, பித்தளை, வெண்கலம் முதலிய உலோகங்களால் கருவிகளும் கலங்களும் செய்தல், சித்திரவேலை, மூங்கில் பிரம்புக்கூடை முடைதல், பீடி, சுருட்டு முதலிய சுருட்டுதல் முதலியவும் மற்றும் சிற்சிலவுமாகும்.

இக்குடிசைத் தொழில்கள் தொன்றுதொட்டு நம்நாட்டில் இருந்து வந்திருக்கின்றன. அவைகள் மேன்மையுற்றிருந்த பண்டைக் காலத்தில் நம்நாட்டிலிருந்த பல பொருள்களும் வெளி நாடுகளுக்கும் கீழ் நாடுகளுக்கும ஏற்றுமதி செய்யப்

பட்டதென்று சரித்திர மூலமாகத் தெரிகிறது. இக்கைத்தொழில்கள் நாளடைவில் சீர்கேடுற்று இன்று மிகவும் விரும்பத்தக்க நிலையில் இல்லாமல் போய்விட்டன. அதற்குப் பல காரணங்கள் உள. பண்டைய கிராம சமுதாய வாழ்க்கை சீர்குலைந்து விட்டது. அதனால் கிராமத் தொழிலாளிகளின் செல்வாக்கும் பிழைப்பும் போய்விட்டது. அவரவர்கள் பிழைப்பைத்தேடி நகரங்களை அடைந்திருக்கிறார்கள்.

போக்குவரத்து வசதிகளும், மேல்நாட்டு சாமான்களின் இறக்குமதியும், அதனால் ஏற்பட்ட போட்டியும், குடிசைத் தொழில்களைக் குலைத்து விட்டன. விவசாயத்திற்கு இன்றியமையாத மண் வெட்டிகளுங்கூட கப்பலிலிருந்து இறங்கி நயமாகக்கிடைப்பதால் நம் கைத்தொழில்கள் அழிந்து போகின்றன. கால மாறுதல் காரணமாக நம் ஜனங்கள் சரசமான பிறநாட்டு சாமான்களையே வாங்குகிறார்கள். இதனால் பல தொழிலாளிகள் பிழைப்பை இழந்தார்கள். யந்திரங்களால் வெகு சுலபமாகவும், குறைந்த செலவிலும் செய்யப்படும் சாமான்களுடன் குடிசைத்தொழில் சாமான்கள் எவ்விதம் போட்டி போடுவது?

ரயில் வசதிகளையும், புதிய பட்டணங்களையும் துணைகொண்டு சிற்சில புதிய கைத்தொழில்கள் வளர்கின்றன. சுருட்டு பீடி முதலியவை தயாரிக்கும் தொழில் புதிதாக உண்டானதே. நகரங்களுக்கு அருகே மற்றும் பல குடிசைத் தொழில்களும் வளர்கின்றன. விவசாயிகளுக்கு வேலை இல்லாமை இருப்பதால் அதை உபயோகப்படுத்துவதற்கு இக்கைத்தொழில்களை நிலை நிறுத்துவது கூடாதெனவும், யந்திரங்களும், யந்திர சாலைகளும், இந்தியர்களுக்கு அவ்வளவு ஏற்றதல்லவென்றும் அநேகர் கருதுகின்றனர். மேலும், யந்திர சாலைகளுக்கு வேண்டிய பொருளும் அதை ஓட்டும் சக்தியும நாம் தேடவேண்டும். இவை கிடைக்கும் சமயம் கிடைக்கட்டும். ஆயினும், தற்காலம் நிலை நிற்கக்கூடும் சில குடிசைத் தொழில்களை; வளர்ப்பது நாட்டவர்கள் கடமையாகும்.

யந்திரங்கள் மிகும் இக்காலத்தில் குடிசைத் தொழில்கள் தலை எடுக்குமா என்ற ஐயம் எழலாம். ஆனால்: இன்னும் மேனாடுகளிலுங்கூட குடிசைத் தொழில்கள் அறவே ஒழிந்துவிடவில்லை. இங்கிலாந்தில் பேர்போன கத்திகள் யாவும் (ஷெப்பீல்ட் கத்திகள்) குடிசைத் தொழில்களின் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றன. இங்கிலாந்தில் பானைகள் இவ்விதமே செய்யப்படுகின்றன. சரிகையும், பூவேலையும் நாட்டிங் காமில் குடிசைத் தொழிலின் மூலமே நடக்கின்றன ஜர்மனியில் இன்னும் சிறு பொம்மைகள் வீடுகளிலேயே செய்யப்படுகின்றன. ஏனைய நாடுகளிலும் பல குடிசைத் தொழில்கள் நடந்துவருகின்றன.

## தொழிலாளர்கள்

சில தொழில்கள் பிரதமத் தொழில்களாகத் தனியாகவும், மற்றவை வேறு சிலவுடனும் செய்யப்பட்டு வருகின்றன. சில குறிப்பிட்ட ஜாதிகள் சில குறிப்பிட்ட தொழில்களை கையாளுபவைகளாய் காணப்படினும் உற்று நோக்கின் அவ்விதமில்லை. எல்லா ஜாதியினரும் எந்த தொழிலையும் செய்கிறார்கள். முகம்மதியர்கள் சகல தொழில்களையும் கைக்கொள்ளுகிறார்கள். நெசவுத் தொழிலை தேவாங்கர்களும், கைக்கோளர்களும், சாலியர்களும், பட்டுநூல் காரர்களும், சௌராஷ்டிரர்களும் கைக்கொள்ளுகிறார்கள். முகம்மதியர்களும் ஆதித்திராவிடர்களும் நெசவுத் தொழிலை செய்கிறார்கள். ஆண், பெண், குழந்தைகள் முதலிய வீட்டிலுள்ள பலரும் அத் தொழிலில் ஈடுபடுகிறார்கள். கம்பளி நெய்தலை விசேஷமாக குரும்பர்கள் செய்கிறார்கள். ஆயினும் இதில் முகமதியர்களும கலந்து கொள்ளுகிறார்கள். மூங்கில்பாய் தட்டு, கூடை முதலியவைகளை கவரநாயுடுக்களும், ஒரு குலத்தவர்களும் செய்கிறார்கள் பனம்பாய் முதலியவைகளை நாடார் பெண்கள் முடைகிறார்கள். செருப்பு முதலிய தோல் வேலை சக்கிலியர்களாலும், தோலைப்பதனிடுதல் முகம்மதியர்களாலும் செய்யப்படுகிறது பீடி சுருட்டு முதலியன முகம்மதியர்களாலேயே தயாரிக்கப்படுகிறது. செம்படவர்களே மீன் பிடித்து வியாபாரம் செய்கிறார்கள.

## கைத்தொழில்களுள்ள இடங்கள்

தயாரிக்கும் சாமான்களை சரசமாக விற்க சௌகரியங்கள் உள்ள இடங்களும், முதலாளி



கள் உள்ள இடங்களும் தொழில்களை நடத்த வேண்டிய வசதிகள் உள்ள இடங்களும், தொழில்கள் விருத்தியாகும் இடங்களாகும். சீதோஷ்ண நிலையை அனுசரித்தும் நல்ல ஜலவசதியை அனுசரித்தும் சிற்சில கைத்தொழில்கள் நிலை பெறுகின்றன. வைகை நிலத்தின் மேன்மையால் சாயம் போடுவது சிறப்பாகிறது. காவேரி படுகைகளில் கோரை வளர்வதால் பாய் நெய்தல் இயல்பாகிறது. குளிர்ந்த சீதோஷ்ண நிலையே பட்டு உர்பத்திக்கு அனுகூலமாக இருக்கிறது.

## கைத்தொழில்களின் அமைப்பு

கிராமத் தொழிலாளிகளாகிய கம்மார், தச்சர், கைக்கோளர் முதலியவர்கள், தங்கள் கிராமங்களுக்கு வேண்டியவைகளைத் தயாரித்தல் ஒரு விதமாகும். நகரங்களில் கிராமங்களைவிட ஒழுங்காக நிறுவப்பட்டு நயமானதும் விலை உயர்ந்ததுமான சாமான்களை தயாரித்தல் மற்றொருவிதமான அமைப்பாகும். நகரங்களிலுள்ள கைத்தொழில்கள் காலக் கிரமத்தில் முதலாளிகள் கையில் அகப்பட்டு தொழிலாளிகள் முதலாளிகளுக்குக்கட்டுப்படவேண்டி இருக்கிறது. குடிசைத் தொழில்கள் அடையும் மாறுபாட்டை நெசவுத்தொழிலொன்றே செவ்வனே விளக்கும். நெசவாளிகளுக்கு முதலில் நூலைக்கொடுத்து அதற்குவேண்டிய கூலியை பணமாகவோ அல்லது தானியமாகவோ கொடுக்கப்பட்டது. சில நெசவாளிகள் தங்கள் துணிகளை தாங்களே நெய்து தாங்களே விற்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான கைமுதலின்மையால் அத்தகையோர் வியாபாரம் சிறிதாகவே இருக்கவேண்டி இருக்கிறது. அவர்கள் சில சமயங்களில் நூல் முதலியவைகளை கடனிற்கு வாங்குகிறார்கள். அவ்வாறு வாங்கும் கடனுக்கு வட்டி கொடுக்க நேரிடுகிறது. சில இடங்களில் நெசவாளியே தான் நெய்யும் துணி முழுவதையும் விற்க முடியாததினால் நூல் வாங்கிய வியாபாரியிடமே தன் சரக்குகளை விற்கிறான்.

சில நயமான துணிகளுக்கு வருஷம் பூராவும் விலை கிடைப்பதரிது. சிலவற்றினுக்கு தூரதேசத்தில்தான் விற்பனையுண்டு. இவ்விதம் தங்கள் சரக்குகளை விற்க முதலற்ற நெசவாளிகள் காலக்கிரமத்தில் முதலாளியின் கீழ்படுகிறார்கள்.

இவ்விதமாக அநேக முக்கியமான நெசவு ஸ்தலங்களில் வியாபாரிகள் ஏற்பட்டார்கள். இவ்வியாபாரிகள் நூல் விற்பதிலும் அதற்கு வட்டி வாங்குவதிலும் நெய்த துணியை வாங்கி விற்பதிலும் பலவகையிலும் லாபம் சம்பாதிக்க ஆரம்பித்தார்கள். இம்முறைக்குமேல், ஓர் கூரையின் கீழ் பல்லாயிரம் மனிதர்களை அடைத்து யந்திரங்களைக்கொண்டு வேலை செய்யும் முறையும் ஏற்பட்டது. ஆனால் இம்முறை குடிசைத் தொழில் செய்பவனுக்கு ஏர்படுவதில்லை. அவனுக்கு பலருடன் சேர்ந்து வேலை செய்வதும் பிடிப்பதில்லை. மேலும், யந்திரசாலையில் எவ்வளவு நயமாக தயாரிக்கப்படினும் குடிசையில் தயார் செய்யப்படும் பொருளின் நயமும் மேம்பாடும் அதிலிருப்பதில்லை. யந்திர சகாயங்களையும், சீர்திருத்தங்களையும் ஒரு பெரிய ஆலையிலேயேயன்றி குடிசைகளிலும் ஏற்படுத்திக் கொள்ளவும் கூடும்.

மேற்கூறிய முறைகளிலேயே பல கைத்தொழில்களும் இருந்துவருகின்றன. ஒவ்வொரு கைத்தொழிலிலும் நடுவில் ஒரு வியாபாரியோ அல்லது ஒரு தரகனோ உள்ளே புகுந்துவிடுகிறான். பெரும்பான்மையான தொழிலாளிகள் முதலற்றவர்கள். அவர்கள் தங்கள் தொழில்களை நடத்துவதற்கு வேண்டிய முதலுக்காக முதலாளிகளுக்குக்கட்டுப்பட்டுப் போகிறார்கள்.

## தொழில்களின் உற்பத்தி

தனித்தனி தொழில்களின் உற்பத்தி விரிவாக பின் குறிக்கப்படும். பொதுவாக கை நெசவால் 25 கோடி கஜம் துணி நெய்யப்படுகிறது. சாயத் துணிகள் மாத்திரம் சுமார் 2 கோடி ரூபாய்க்கு வருஷந்தோறும் ஏற்றுமதியாகிறது. சுமார் 30 லெக்ஷம் பெறுமானபட்டு உற்பத்தி செய்யப்படுகிறது. இப்பட்டானது மாகாணத்திலுள்ள பல இடங்களுக்கும் அனுப்பப்படுகிறது. கம்பளியின் உற்பத்தியோ வருஷந்தோறும் பல லெக்ஷங்களுக்கு வருகிறது. சாய வேலையும் சீட்டி வேலையும் மிகவும் தலைதூக்கி நிற்கின்றன. கோரைப் பாய்களும் மிகுந்த விலை பெறுகின்றன. பட்டமடைப்பாய்கள் மிகவும் நயமானவைகளாகையால் அவைகளை ஆங்கிலேயர்களும் மற்றுமுள்ள பிறநாட்டு யாத்ரீகர்களும் வாங்குகிறார்கள். வெண்

கலம் முதலிய உலோகங்களால் வீடுகளுக்கு வேண்டிய பாத்திரங்களும் சித்திர சாமான்களும் செய்யப்படுகின்றன.

## வேலை நயம்

தற்காலம் குடிசைத் தொழிலாளிகளுக்குள் எவ்வித ஒற்றுமையும் தொழிலமைப்பும் இல்லை. அதனால் அவர்களுக்கு வேண்டிய சாமான்கள் கிடைப்பதில்லை. நடுவே நிற்கும் வியாபாரி தன் லாபத்திலேயே நோக்கமுள்ளவனாக இருப்பதினால் வேலை நயத்தை அவன் கவனிப்பதே இல்லை. அவன் லாபத்தில் குறியாக இருப்பதினால் தொழிலாளிகள் தங்களிடம் இருக்கும் சரக்குகளை சிறிதளவு திருடவும் மறைக்கவும் முயலுகிறார்கள். இதனால் உற்பத்தியாகும் பொருள்களின் நயம் கெட்டு அதனால் அதன் வியாபாரமும் கெட்டுப் போகிறது.

தொழிலாளிகளுக்குக் கை முதலின்மையாலும் முதலாளிகளின் லாபக்குறியாலும் யந்திரங்களால் செய்யப்படும் நயமான பண்டங்களின் போட்டியாலும் ஜனங்கள் பொதுவாக பிறநாட்டுப் பண்டங்களுக்கு ஒரு விருப்பும் நம்நாட்டுப் பண்டங்களுக்கு ஒரு வெறுப்பும் காட்டுவதாலும் வியாபாரிகள் பிறநாட்டு சாமான்களையே தங்கள் கடைகளில் வைத்து விற்பதினாலும் நம்நாட்டுக் கைத்தொழில்கள் மெலிந்து வேலை நயமும் குறைந்து போகிறது.

## வேலை நேரம்

பொதுவாக சரக்குகளின் தேவையை ஒட்டியே வேலை நேரம் நிர்ணயிக்கப்படுகிறது. பூராவும் அதே தொழில் செய்கிறவர்களும், சில காலங்களில் மாத்திரம் அதைச் செய்பவர்களும் இருக்கிறார்கள். சில தொழிலாளிகள் வருஷம் பூராவும் வேலை செய்கிறார்கள். சிலர் சில மாதங்களிலேயே வேலை செய்கிறார்கள் தங்கள் சாமான்களை தாங்களே விற்பவர்களுக்கு அதை விற்றுவருவதில் சில நாட்களை போக்கவேண்டி இருக்கிறது. நெசவாளிகளுக்கு தீபாவளி, பொங்கல் முதலிய பண்டிகைகளுக்கு முன்னுள்ள காலம் மிகவும் வேலையுள்ளதாகும்.

சாதாரணமாக வேலைக்காரன் சூரிய உதயத்துடனே தன் வேலையைத் துவக்குகிறான். பன்னிரண்டு மணி வரையில் வேலை செய்து பிறகு இரண்டு மணி ஓய்வெடுத்துக்கொள்ளுகிறான். நெசவாளிகளுக்கு சகாயமாக தொழில் செய்யும் பெண்களும் குழந்தைகளும் தங்களுக்கு வீட்டு வேலை இல்லாத நேரத்தில் வேலை செய்கிறார்கள். அவர்கள் சராசரி தினம் இரண்டு மூன்று மணி நேரம் வேலை செய்கிறார்கள்.

சந்தை கூடும் கிராமங்களிலுள்ளவர்கள் அன்று வேலை செய்வதில்லை. அவர்கள் சாமான்கள் விற்கச்செல்லுவார்கள். அமாவாசை தினமே அவர்களுக்கு ஓய்வு நாள். ஏனைய முக்கியமான திருவிழாக்காலங்களிலும் பண்டிகை நாட்களிலும் அவர்கள் வேலை செய்வதில்லை.

## தொழிலாளர் சமூக நிலை

யந்திரங்களில் வேலை செய்பவர்களைவிட பெரும்பான்மை குடிசைத் தொழிலாளர்கள் குறைவாகவே சம்பாதிக்கிறார்கள். ஆனால் இவர்களுக்கு ஓர் சபையின்கீழ் வேலைசெய்வதற்கும், குறித்த நேரத்தில் வேலை செய்வதற்கும், ஒரு கட்டுப்பாட்டின்கீழ் வேலை செய்வதற்கும் பிடிப்பதில்லை. ஆயினும் தாங்கள் யந்திரசாலையில் அதிகம் சம்பாதிக்கக்கூடும் என்பதை அவர்கள் சிறிது சிறிதாக அறிந்து கொள்ளுகிறார்கள்

குடிசையில் அவர்கள் இஷ்டம்போல் வேலை செய்து சாயங்காலம் கள்ளுக்கடைக்குப் போகிறான். வேலையுள்ள காலங்களில் விளக்கு வைத்துக்கொண்டு வேலை செய்தும், சிறு குழந்தைகளை வேலைக்கு வைத்தும் துன்புறுத்துகிறார்கள். சிறு வயதில் அதிக வேலை செல்வதினால் குழந்தைகளின் தேகவலிமை சிதைந்து போகிறது. குடிசைத் தொழிலாளர்களை வீட்டுப் பெண்கள் கண் காணித்து அவர்களை தீயவழிகளில் செல்ல விடாமலும், அவர்கள் கொடுக்கும் சிறு பொருளைக்கொண்டு வீட்டுச் செலவுகளை நடத்தியும் வருகிறார்கள். அவர்களும் தங்களால் கூடிய அளவு பாடுபடுகிறார்கள். சில இடங்களில் நெய்வது தவிர மற்றவைகள் எல்லாம் பெண்களாலேயே நடைபெறுகின்றன.

## தொழிலாளரின் செல்வநிலை

திறனும் நுட்பமுமுள்ள தொழிலாளி தினமொன்றுக்கு ஒரு ரூபாய் சம்பாதிக்கிறான். மண்வெட்டியுடன் மூட்டு வேலை செய்பவன் ஆரணா



வரையில் சம்பாதிக்கிறான். பெண்கள் இரண்டணாவும் குழந்தைகள் ஓரணாவும் கூலியாகப் பெறுகிறார்கள். அவரவர்கள் தயாரிக்கும் சாமான்களுக்கு இருக்கும் கிராக்கியை அனுசரித்தும், இவ்விதமான மாறுபட்ட கூலியைப்பெறுகிறார்கள். சில உயர்ந்த ஜாதிக்காரர்கள் தவிர மற்ற ஆடவர்களெல்லாம் குடியில் தங்கள் சிறிய வருமானத்தையும் செலவிட்டு எளியவராகிறார்கள்.

இவர்கள் கடன்பட்டு தங்கள் முதலாளிகளுக்குக் கட்டுப்பட்டுப் போகிறார்கள். பெரும்பாலும் நெசவாளிகளும், கம்மார்களும் இவ்விதம் கடன் பட்டவர்களே. இக்கடன்களை சிறுகச்சிறுக திருப்பிக்கொடுக்கும் முறையும் உண்டு. ஆனால், கைதேர்ந்த தொழிலாளியை தனக்குக் கட்டுப்படுத்தி வைத்துக்கொள்ள பழய கடன்களை முதலாளிகள் திருப்பி வாங்காது வளர விடுகிறார்கள்.

பருத்தி நூல் நூற்பதில் நாளொன்றுக்கு வருமானம் ஒன்றரை அணா, மூங்கில் கூடை முதலிய முடைவதில் நான்கு முதல் எட்டு அணாவும், மிகவும் நுட்பமான மற்ற வேலைகளில் சராசரி ஒரு ரூபாய் வரையிலும் வருமானம் கிடைக்கிறது.

## கைத்தொழிலுக்கு வேண்டிய சாமான்கள்

கைத்தொழிற்கு வேண்டிய சாமான்கள் நம் ஜில்லாக்களிலேயே வளருகின்றன. அநேக ஜில்லாக்களில் பருத்தியே பெரும் பான்மையான வெள்ளாமை. அதில் முக்கால் வீதம் பருத்தி பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. நெசவிற்கு வேண்டிய நூல் இறக்குமதி செய்யப்படுகிறது. இம்மாகாணத்தில் சுமார் 21 நூல் நூற்கும் யந்திரங்கள் இருக்கின்றன. அவை ஆறு கோடி ராத்தல் நூல் உற்பத்தி செய்கின்றன. மோட்டா நூல்கள் இங்கு தயாரிக்கப்படுகின்றன. நயமான நூல்கள் பெரும்பாலும் இங்கிலாந்திலிருந்தும் இறக்குமதி செய்யப்படுகிறது. அதுவுமின்றி சிறிதளவு கையால் நூற்கப்பட்ட நூலும் நெசவில் உபயோகப்படுகிறது. இக்கைநூலால் 1926—27 வருஷத்தில் 14 லக்ஷம் ரூபாய் பெறுமான துணி தயாரிக்கப்பட்டிருப்பதாக கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. மேலும், சிறிது பட்டு உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது. சென்ற வருஷம் இதுதவிர சீனாவிலிருந்து 56 லக்ஷம் ரூபாய் மதிப்புள்ள பட்டு இறக்குமதியாகி இருக்கிறது. சரிகை பிரான்சிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. புதுசேர்க்கைப்பட்டு இங்கிலாந்திலிருந்தும் இத்தாலியிலிருந்தும் வருகின்றன.

சென்னை, திருநெல்வேலி, மதுரை கோயம்புத்தூர் முதலிய நூற்சாலைகளில் நெ. 22½ நூல்தான் தயாராகிறது. பெங்களூர், நாகபூர், பம்பாய் ஆலைகளின் நூலும் இங்கு உபயோகப்படுகிறது.

கம்பளி நெசவில் உயிருள்ள பிராணிகளின் தேகத்திலிருந்து கத்தரித்தெடுத்த உரோமமும், தோல் பதனிடும் இடங்களிலிருந்து கிடைக்கும் உரோமமும் பயன்படுகின்றன. தோல் கிடங்குகளிலிருந்து உரோமம் அனுப்பப்படுவது சேலம், கோயம்புத்தூர், ஆம்பூர், வாணியம்பாடி முதலிய ஊர்களிலிருந்தேயாகும்

பெரும் பான்மையாக சாயங்களெல்லாம் பிறநாடுகளிலிருந்து வாங்கப்படுகின்றன. ஜெர்மனி, ஹாலந்து, இங்கிலாந்து, பெல்ஜியம் முதலிய தேசங்களிலிருந்தே அவைகள் வருகின்றன பழய நாட்டுச் சாயங்கள் சில இடங்களிலேயே கையாளப்படுகின்றன.

காவேரி முதலிய நதிகளின் படுகைகளிலும், சதுப்பு நிலங்களிலும், ஒரு வெள்ளாமையாக நஞ்சை நிலங்களிலும் கோரை பயிரிடப்படுகிறது. மேலும், குளக்கரைகளிலும், பெரும் கால்வாய்களின் கரைகளிலும், இவை வளர்கின்றன. ஒரு ஏக்கருக்கு சராசரி ரூ 150 முதல் 200 வரை ஒவ்வொரு போகமும் பலன் கிடைக்கும். மூங்கில் பிரம்பு முதலியன மலைகளிலும் காடுகளிலும் கிடைக்கின்றன. தஞ்சாவூர் பிரம்பு மிகவும் கடினமாக இருப்பதால் நயமான வேலைக்கு மலாக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்படுகிறது

உலோகங்கள் எல்லாம் ஐரோப்பிய நாடுகளிலிருந்தே நம்மாகாணத்திற்கு இறக்குமதி செய்யப்படுகின்றன. சென்ற வருடம் இங்கிலாந்திலிருந்தும், ஜர்மனியிலிருந்தும் 49 லக்ஷம் ரூபாய்ப் பித்தளை வாங்கப்பட்டிருக்கிறது. ஜெர்மனி, பிரான்சு, பெல்ஜியம் முதலிய தேசங்களிலிருந்து ரூ. 13 லக்ஷத்திற்கு இறக்குமதி செய்யப்பட்டிருக்கிறது 12 லெட்ச ரூபாய் அலுமோனியம் இங்கிலாந்திலிருந்து வந்திருக்கிறது. இச்சாமான்

களை தொழிலாளர்கள் வாங்குவதற்குள் அதிக லாபத்தை அவர்கள் நடுவிலுள்ள தரகர்களுக்கு கொடுக்கவேண்டி இருக்கிறது. 100-க்கு 12½ முதல் 25 வரையில் அவர்கள் இவ்விதம் லாபம் சம்பாதிக்கிறார்கள். அவர்கள் எடுத்துக்கொள்ளும் லாபமெல்லாம் தொழிலாளரின் கூலியைக் குறைக்கிறது. தொழிலாளருக்கு வேண்டிய சாமான்களை மொத்தத்தில் வாங்க அவர்களுக்கு ஒரு ஐக்கிய சங்கம் இருப்பின் அது பெரும் பயனை விளைக்கும்.

## தொழிற் கருவிகள்

பல கைத்தொழில்களிலும் உபயோகிக்கும் கருவிகள் சாதாரணமானவைகளே. அவைகள் குறைந்த செலவில் அங்கங்கே தயாரிக்கப்படுகின்றன. தொழிலாளி தனக்கு வேண்டும் எல்லா கருவிகளையும் தானே வாங்கி வைத்துக்கொள்ளுகிறான். ஆனால், பிறருக்காக கூலி வேலை செய்தால் அப்பொழுது கருவிகளை முதலாளியே வாங்குகிறான். கருவிகளெல்லாம் பண்டை காலத்தவை. நவீன யந்திர மாறுபாடுகளையும், சீர்திருத்தங்களையும் அவர்கள் கொள்வதில்லை. யந்திர சாலைகளில் கருவிகள் முதலாளிக்குச் சொந்தமானது. ஆகவே, அவன் ரூபாய்க்கு மூன்று அல்லது நான்கு அணாக்களை கருவியின் உபயோகத்திற்காக கூலியிலிருந்து பிடித்து விடுகிறான். கொல்லுவேலை, தச்சுவேலை முதலியவற்றினுக்கு ஆகும் செலவு முதலாளியால் கொடுக்கப்பட்டு அதற்காக அவன் கூலியில் சராசரி பாதி பிடிக்கப்படுகிறது.

தொழிலாளிகள் நவீன சீர்திருத்தங்களை சீக்கிரமாக ஏற்பதில்லை. இன்னும் பழைய குழித்தறிகளை வைத்துக்கொள்ளுகிறார்களே தவிர புதுசட்டத் தறியை வைத்துக்கொள்வதில்லை. பாவு போடுவதில் பழைய முறையில் சிரமப்பட்டு முளையடித்து போடுகிறார்களே தவிர பாவுபோடும் உருளையைக் கையாள்வதில்லை. சீர்திருத்தங்களுக்கு விரோதமான ஒரு மனோபாவம் தொழிலாளிகளிடத்திருக்கிறது. மேலும், அவர்கள் எளியவர்கள். சில சீர்திருத்தங்களை அனுசரிக்க அவர்களிடம் பணமுமில்லை. தொழிலாளிகள் புது யந்திர சக்தியையும், புதிய சீர்திருத்தங்களையும் கையாளவேண்டுமாயின் அவர்களுக்கென ஒரு கூட்டுறவு சங்கமோ அல்லது சர்க்காரோ அவர்களுக்குத் தேவையானவற்றை வாங்கி உதவி அப்புது முறையின் அனுகூலங்களை விளக்கி அதில் அவர்களைப் பழக்கவேண்டும்.

## சாமான்களின் விற்பனை

உள்ளூருக்குள் விற்பனையாகும் சாமான்களைத் தவிர ஏனையவற்றினை ஒரு வியாபாரியைக் கொண்டே விற்கவேண்டி இருக்கிறது. ஒரு சாமானை எவ்வளவுக்கெவ்வளவு தூரத்தில் விற்கவேண்டுமோ அவ்வளவிற்கவ்வளவு வியாபாரியின் உதவி வேண்டி இருக்கிறது. இவ்விதம் தொழிலாளிகளின் லாபத்தை வியாபாரிகளே பெரும்பாலும் அடைகிறார்கள். இவ்விதம் நேருவது இயற்கையே யாயினும் கூடிய வரையில் வியாபாரியின் லாபத்தைக் குறைத்து தொழிலாளியின் வருமானத்தை அதிகரிக்கவேண்டும். இதற்குக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் அமைக்கப்பட்டு அவைகள் தொழிலாளிகளுக்கு வேண்டிய சாமான்களை மொத்தமாக வாங்கி அவர்களுக்குத் தரவும், அவர்கள் தயாரிக்கும் பண்டங்களை அவர்களுக்காக பொறுப்பேற்று விற்கவும் வேண்டும். இவ்வித ஏற்பாட்டால் இரு புறத்தும் தொழிலாளிகளுக்கு அதிக லாபம் கிடைக்கும்.

## தொழிலாளரின் கூட்டுறவு

மேற்கூறிய முறையில் தொழிலிற்கு வேண்டிய சாமான்களை மொத்தத்தில் வாங்கித்தரவும், அவர்கள் தயாரிப்பவைகளை விற்றுத்தரவும் 1928-௵ இறுதியில் இம்மாகாணத்தில் 70 சங்கங்கள் இருந்தன. இவைகளில் பெருமபான்மை நெசவாளிகளுக்காக ஏற்பட்டன. நெசவாளிகளுக்காக முதன் முதலாக 1905-௵த்தில் கஞ்சீபுரத்தில் ஓர் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. அச்சங்கம் அங்கத்தினர்களுக்கு நூலும் அதை நெய்வதற்கு முன் பணமும் கொடுத்து பிறகு தயாரான துணிகளை கூலி கொடுத்து பெற்றுக்கொண்டது. முதலில் அது செவ்வனே வேலை செய்யினும் பிறகு சீர்குலைந்தது. அங்கத்தினர்கள் துணியின் நயத்தை பாழ்படுத்தியும் வாங்கிய கடனை கொடுக்காமலும் அச்சங்கம் கெட்டது. அவரவர்கள் வீட்டில் வேலை செய்வதினால் இந்நிலைமை ஏற்பட்டதென எண்ணி அங்கத்தினர்கள் யாவரையும் ஒரே இடத்தில் வைத்து வேலை செய்ய ஏற்பாடு



செய்யப்பட்டது. அதுவும் அவ்விதமே பயனற்றதாயிற்று. ஏனைய பல சங்கங்களும் இவ்விதமே ஆயின. இச்சங்கங்கள் கெடுவதற்குப் பல காரணங்களுண்டு. அவையாவன:—அங்கத்தினர்கள் கடன் பட்டிருத்தல்; முதலாளிகளும், தொழிலாளிகளை வேலை வாங்குவோரும் கூட்டுறவு சங்கங்களை வெறுத்தல்; ஊழியமின்றி சங்கத்தின் வேலைப்பார்க்க ஆள் கிடைக்காதிருத்தல்; தொழிலாளிகள் குடி முதலிய கெட்ட வழக்கங்களை உடையவர்களாயிருத்தல்; சங்கத்திற்கு நம்பிக்கையும் பொறுப்பும் காட்டாதிருத்தல்; தங்களுடைய மேன்மையை கருதாதிருத்தல், ஒரே வித நயமான பண்டங்களை உற்பத்தி செய்யாதிருத்தல்; தயாரித்த பண்டங்களுக்கு விற்பனை கிடைக்காதிருத்தலும் மற்றும் பலவுமாம்.

## தொழிலாளிகள் கல்வி

பண்டை காலத்து சாதிக்கட்டுப்பாடுகள் தொழில் முறையை நன்கு கற்பித்து வந்தன. இச்சாதி, தொழில்; கட்டுப்பாடுகள் மறையவும் தொழிற் கல்வியே மறைந்து விட்டது. பெரும்பான்மையான தொழிலாளிகள் எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் சர்க்காரும் மற்றும் சமூக ஊழியர்களும் எவ்வளவு முயற்சி எடுப்பினும், அவர்களினது வறுமையால் அவர்கள் குழந்தைகளை 6—7 வயதானதும் தங்கள் தொழிலில் ஈடுபடுத்தி அவர்களிடம் இயன்றமட்டும் வேலை வாங்கிக் கொள்ளுகிறார்கள். ஆகையால் அச்சிறுவர்களுக்கு எண்ணும் எழுத்தும் கற்றுக்கொடுப்பதற்கில்லை.

இயந்திரங்களும் சீர்திருத்தங்களும் நிறைந்த இக்காலத்தில் தொழிலாளிகள் பண்டைய கருவிகளுடன் காலந்தள்ள எவ்விதம் முடியும்? அவர்களும் தங்கள் யந்திரங்களுடனும் பிறநாட்டவர்களுடனும்போட்டிபோட அனுகூலமான முறைகளைக் கற்றுக்கொள்வது இன்றியமையாதது, இம்மாகாணத்தில் தொழிற் கல்வி புகட்டும் சாலைகள் சிலவே உள. சென்னை டிரேட் கல்லூரியும், தோல்சாலையும், நெசவுச்சாலையும், சிற்பச்சாலையும், மதுரையிலுள்ள தொழிற்சாலையும் குறிப்பிடத்தக்கன. இதுவும் சர்க்கார் உதவி பெற்ற 60 சாலைகளும் இருக்கின்றன. சில மூலை முடுக்குகளில் இருப்பதால் அவை இருப்பது பலருக்குத் தெரியாது. இப்பள்ளிக்கூடங்களில் சேர்க்கப்படுபவர்களுக்கு எழுதவும் படிக்கவும் தெரியாதிருக்கிறது. வறுமையுற்றிருக்கும் இந்நிலையில் தொழிலாளர்கள் தங்கள் குழந்தைகளை பள்ளிக்கூடங்களுக்கு அனுப்ப அவர்களுக்கு ஏதாவது போக்கு காட்டவேண்டும். கொடுக்கும் கல்வியும் எண்ணும் எழுத்துடன் தொழில் முறையும் கூட்டுறவு முதலிய பொது விஷயங்களும் கூடியதாயிருத்தல் வேண்டும். அதிக தொழிற் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தவேண்டுமென்பதும் எலிமெண்டரி, செக்கண்டரி பாடசாலைகளில் தொழிற்கல்வி போதிக்கப்படவேண்டுமென்பதும் பலராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

சர்க்காரே தற்காலம் இருக்கும் பள்ளிக்கூடங்களைத்தவிர மற்றும் இதுபோன்ற பள்ளிக்கூடங்களை ஏற்படுத்த முயன்று வருகிறார்கள். ஜில்லா போர்ட்களும் நகர சபைகளும் தங்கள் கல்விச் சாலைகளில் தொழிற்கல்வி பயிற்றுவிக்க முயன்று வருகின்றன. குழந்தைகளை நல்வழியில் பழக்குவதில் அதிக சிரத்தை காட்டவேண்டும். வயது வந்த தொழிலாளர்களுக்கு தொழிலுக்குவேண்டிய யோசனைகள் கூறி, கருவிகளை உதவி, அவர்களின் வருமானத்தைப்பெருக்க முயலவேண்டும். நாடெங்கும் சுற்றுப் பிரயாணம் செய்யும் சிலரைக் கொண்டு புதிய முறைகளை தொழிலாளருக்கு சர்க்கார் புகட்டவேண்டும். அதனால் பெரும் பயன் ஏற்படலாம்.

148734

## சர்க்கார் உதவி

தொழிலாளர்களை முன்னேற்றுவதற்கு அநேக யோசனைகள் சொல்லப்படுகின்றன: சில தொழில்களில் புதிய சீர்திருத்தங்களை கையாள வேண்டும். சில தொழில்களுக்கு சாமான்கள் விலை சரசமாய் கிடைக்கும்படி செய்யவேண்டும். புதிய முறைகளில் சாமான்களை தயாரிக்க அவர்களுக்குக் கற்பிக்கவேண்டும் தொழிலாளிகளை துர்வழக்கமாகிய கட்குடியினின்றும் மீட்கவேண்டும். தொழிலாளர்கள் செய்யும் சாமான்களுக்குத் தகுந்த விற்பனை ஏற்படவேண்டிய விளம்பரம் செய்யப்படவேண்டும். இவைகளுக்கு மேலாக குறைந்த வட்டிக்குப் போதுமான தொகையை தொழிலாளர்களுக்கு உதவ வேண்டும். தொழிலாளர்

களுக்கு வேண்டிய சாமான்களை மொத்தத்தில் அவர்களுக்கு வாங்கித்தரவும், அவர்கள் தயாரிக்கும் பண்டங்களை விற்றுக்கொடுக்கவும் கூட்டுறவு சங்கங்கள் பாடுபடவேண்டும்.

மேலும், ஒரு சமாச்சாரச் சங்கம் ஏற்படவேண்டும். அச்சங்கம் எந்தந்தச் சரக்கு எங்கு விற்கப்படும் என்றும், எந்தந்த புது கருவிகளை தொழிலாளர்கள் உபயோகிக்கலாமென்றும், எப்பண்டம் எம்முறையில் இருக்கவேண்டுமென்றும், மற்றும் பல விவரங்களையும் தொழிலாளர்களுக்கு உதவவேண்டும். ஆரம்பத்தில் இச்சங்கம் சர்க்காராலேயே நடத்தப்பட்டு பிறகு ஒரு கூட்டுறவு சங்கமாக மாற்றப்படலாம். இத்தொழிலாளர்களுக்குக் கண்காணிப்பு மிகவும் அவசியமானது. கண்காணிப்புடன் யோசனை கூறுதல் மிகமிக இன்றியமையாதது. இதற்கெனவே அரசாங்கத்தார் ஒரு இலாகை ஏற்படுத்தவேண்டும். மேலும், சர்க்கார் சில சரக்குகளுக்கு அனுகூலமான ரயில் விகிதங்களை ஏற்படுத்தலாம். காட்டிலிருந்து எடுக்கும் சாமான்களுக்கு கட்டணத்தைக் குறைக்கவோ அல்லது பூராவும் எடுக்கவோ செய்யவேண்டும். அரசாங்கத்தார் புதிய கருவிகளின் பயன்களை விளக்கி அவைகளை தொழிலாளர் கையாளச் செய்ய முயலவேண்டும். கூடுமான இடங்களில் சரசமாக மின்சார சக்திகள் கிடைக்கும்படி செய்யவேண்டும். தொழிலாளர்களின் வேலையை அடிக்கடி கண்காணித்து அவர்கள் பண்டங்களின் நயத்தை கெடுக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டும். குடிசைத் தொழில் கல்விச்சாலைகளை சென்னை போன்ற இடங்களில் ஏற்படுத்தவேண்டும். தொழிலாளருக்கென கிராண்டுகளோ, அல்லது குறைந்த வட்டிக்குக் கடன்களோ வழங்கவேண்டும். உற்பத்தியாகும் பண்டங்களை விற்பனை செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். சர்க்காரின் தேவைகளான துணி நாடா முதலியவைகளை தொழிலாளரிடத்திலிருந்து வாங்கிக்கொள்ளவேண்டும், சிறைத் தொழிற்சாலையில் குடிசைத் தொழிலிற்கு உதவியாகும்படியான தொழில்களை கையாளவேண்டுமேயன்றி அவைகளுடன் போட்டிபோடலாகாது.

### மத்திய பண்டகசாலை

கூட்டுறவு ரிஜிஸ்திரார் அவர்களும் தொழில் இலாக்கா டைரக்டர் அவர்களும், குடிசைத் தொழில் சாமான்களை விற்க ஒரு மத்திய பண்டகசாலையை ஏற்படுத்த வேண்டுமென யோசனை கூறி இருக்கிறார்கள். குடிசைத் தொழிலாளர்கள். தங்கள் பண்டங்களை ஏற்றுமதிசெய்யவும், அவைகளை விளம்பரம் செய்யவும், வசதிகள் இன்றியே அவர்கள் மிகவும் கஷ்டமடைகிறார்கள். சென்னையில் சில பெரிய கடைகளில் அவை விற்கப்படுகின்றன வாயினும் அவைகளுக்கு வேண்டிய விளம்பரம் சென்னையில் ஒரு கண்காட்சி சாலை மாத்திரம் வைப்பின் அது போதாது. விற்பனை சாலையே மிகவும் அவசியமானது. தொழிலாளர்கள் தங்கள் பண்டங்களுக்கு விற்பனை கிடையாததையே பெரும் குறையாகச் சொல்லுகிறார்கள். அவைகள் ஒழுங்காக விற்பனை அடைவதாயின் தங்கள் வருமானத்தில் சிறிதளவையும் அவர்கள் விட்டுக்கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள். தங்கள் பண்டங்களை விற்பதில் பல தொழிலாளிகள் தங்கள் காலத்தை போக்கவேண்டி இருக்கிறது. ஆகையால் குடிசைத் தொழில்கள் தழைத்தோங்க வேண்டின் அவர்கள் சாமான்களை விற்க ஒரு மத்திய ஸ்தாபனம் இன்றியமையாதது.

ஒரு மத்திய விற்பனை ஸ்தாபனம் அமைப்பது எளிதன்று. அரசாங்கத்தாரே அதைச் செய்யின் பலர் பலவாறு கூறுவர். ஆனால் ஒரு கூட்டுறவு ஸ்தாபனம் ஏற்படின் அது செவ்வனே நடந்தேறும். இந்த ஸ்தாபனம் பல கூட்டுறவு சங்கங்களின் மத்திய ஸ்தாபனமாக ஏற்படுத்தப்படவேண்டும். முதலில் இந்த ஸ்தாபனத்தில் சர்க்காரே சில பங்குகளை எடுத்துக்கொண்டு உதவி புரியவேண்டும். அதனுடைய விதிகள் மிகவும் சுலபமாகவும் சமயத்திற்கேற்ப மாற வேண்டியதாகவும் இருக்கவேண்டும்.

இவ்வமைப்பின் முக்கிய வேலை தொழிலாளர்களின் பண்டங்களுக்கு விற்பனை தேடுவதே. அத்துடன் பண்டங்களை தயாரிப்பதின் அதிகச் செலவையும் குறைக்க முயலவேண்டும். ஆகையால் இவ்வமைப்பே தொழிலாளர்களுக்கு வேண்டிய பலசரக்குகளையும் நயமான விலைக்கு வாங்கி உதவ வேண்டும். மேலும், பல இடங்களிலும் உற்பத்தியிலிருக்கும் செலவு வித்தியாசங்களை குறைக்க முயலவேண்டும். இவ்விதம் செய்யின் வெளிநாடுகளுக்கு அதிக ஏற்றுமதியும் புதிய தினுசுகளும் தயாரிக்க வழி ஏற்படும்.



# தென்நாட்டில் கூட்டுறவு இயக்கம்

**[அண்ணாமலை சர்வகலாசாலை பொருளாதார நிபுணர் டாக்டர் பி. வி. நாராயணசாமி நாயுடு அவர்கள் சேலம் ஜில்லா பாங்கு வெள்ளி விழாவன்று நிகழ்த்திய சொற்பொழிவின் சாராம்சம்]**

சென்னை மாகாணத்தின் ஜனத்தொகையில் 100-க்கு 2·1 விகிதம் கூட்டுறவு இயக்கத்தில் சம்பந்தப்பட்டிருக்கின்றனர். எனினும் நகரங்களிலும் கிராமங்களிலும் ஏற்பட்டிருக்கும் கூட்டுறவுச் சங்கங்களை கவனிக்குமிடத்து இம்மாகாணம் கூட்டுறவு இயக்கத்தில் இரண்டாவதாக விளங்குகிறது. இங்குள்ள நாணயச் சங்கங்களையும் நில அடமான பாங்குகளையும் சேர்த்தால் அவற்றின் எண்ணிக்கையும், அவை மூலம் நடைபெறும் லேவாதேவியும் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து சென்னையானது சங்கங்களின் சங்கியையில் மூன்றாவதாகவும், அவற்றின் லேவாதேவி நிலையில் இரண்டாவதாகவும் விளங்குகிறது. அதாவது, வங்காள மாகாணத்தில் 19,155 சங்கங்கள் ரூ. 4·9 கோடி மூலதனத்துடனும், பம்பாயில் 4526 சங்கங்கள் ரூ 3·87 கோடி லேவாதேவியுடனும், பாஞ்சாலத்தில் 16,125 சங்கங்கள் ரூ. 6·79 கோடியுடனும், சென்னையில் 1[illegible],540 சங்கங்கள் ரூ. 6·64 கோடியுடனும் இருப்பதை நோக்கின் இவ்விஷயம் தெற்றென விளங்கும். நில அடமான பாங்குகள் அல்லாத கிராம நாணயச் சங்கங்களையும் நகர பாங்குகளையும் சேர்த்து கவனிக்குமிடத்து இம்மாகாணமானது அச்சங்கங்களின் சங்கியையில் முதன்மையாயும் அவற்றின் லேவாதேவியில் இரண்டாவதாகவும் இருக்கிறது. ஆனால் நம்மாகாணமானது நாணய லேவாதேவியில்லாத இதர துறைகளில் மிகவும் பின்னணியில் நிற்கின்றது. இத்துறையில் பீகார் ஒரிசா மாகாணம் முதன்மையாக இருக்கிறது. அம்மாகாணத்தில் நாணய லேவாதேவியற்ற முறையில் 8,949 சங்கங்கள் 2·76 கோடி ரூபாய் மூலதனத்துடன் இருக்கின்றன. வங்காளத்தில் 2736 சங்கங்கள் 8 கோடி ரூபாய் மூலதனத்துடனும், பம்பாயில் 504 சங்கங்கள் ரூ. 1·28 கோடியுடனும், பாஞ்சாலத்தில் 2954 சங்கங்கள் ரூ. 5·6 கோடியுடனும் இருக்கின்றன. ஆனால், சென்னையில் இச்சங்கங்கள் 437 தான் உள. இவற்றின் மூலதனம் ரூ. 1·8 கோடி.

பல்வேறு துறைகளிலும் நமது ராஜதானியானது மேன்மையானதாயிருப்பினும், ஜன சங்கியையப்பார்க்குமிடத்து நம்மாகாணத்தின் அபிவிருத்தியானது அவ்வளவு திருப்திகரமானதாக இல்லை. பாஞ்சால மாகாணத்தை எடுத்துக்கொண்டால் அதனுடைய ஜன சங்கியைக்குத் தகுந்தபடியாக அங்கு கூட்டுறவு இயக்கமானது எல்லாத்துறைகளிலும் அபிவிருத்தி அடைந்துள்ளது. எனவே, நமது மாகாணமும் கூட்டுறவு லேவாதேவி அல்லாத இதர துறைகளில் குறிப்பாக விற்பனைச் சங்கங்கள் ஏற்படுத்துவதில், அதிக அபிவிருத்தியடைய வேண்டும்.

நம் ராஜதானியில் கூட்டுறவு இயக்கமானது பல்வேறு துறைகளில் அபிவிருத்தி அடைந்து மக்களுக்கு மென்மேலும் நன்மை பயக்கக்கூடியதாய் ஏற்படுவதில் அநேக முட்டுக்கட்டைகள் இடையே தோன்றி பாதிக்கின்றன. சென்னை கூட்டுறவு ரிஜிஸ்திரார் தமது 1931—32 வருடத்திய நிர்வாக அறிக்கையில், அவ்வாண்டில் 100 விவசாயச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டதாயும், 500 விவசாயச் சங்கங்கள் கலைக்கப்பட்டுள்ளதாயும் குறிப்பிட்டுள்ளார். 1926—27 வருடம் முதல் 1931—32 வருஷம் முடிய ஒவ்வொரு வருஷத்திலும் முறையே 1455, 1260, 726, 535, 320, 129, சங்கங்கள் பதிவு செய்யப்பட்டும், 71, 107, 150, 383, 516, 629 சங்கங்கள் கலைக்கப்பட்டும் இருப்பதை நோக்குமிடத்து சங்கங்களின் எண்ணிக்கை வருஷத்துக்கு வருஷம் குறைந்து வருவது தெளிவு. நமது மாகாணத்தில் மட்டும் இவ்வித நிலைமை ஏற்பட்டுள்ளதென நாம் கருதவேண்டியதில்லை. பீகார், ஒரிசா, ஐக்கிய மாகாணம்போன்ற இடங்களிலும் இப்படித்தான் இருக்கிறது. "நாணயச் சங்கங்களைப் பொருத்தமட்டில் சுமார் மூன்றில் ஒரு பங்கு சங்கங்கள் கூடிய சீக்கிரத்தில் சிதைவுற்றுவிடும்; மற்றொரு பங்கு சங்கங்கள் ஏதோ சுமாரான நிலைமையில் இருக்கின்றன;

அவற்றின் எதிர்கால நிலைமை காலதேசவர்த்தமானத்தைப் பொருத்ததாகும்; இன்னொரு பங்கு சங்கங்கள் மிகவும் சீர்கெட்ட நிலைமையில் இருக்கின்றன" என்று ஐக்கிய மாகாண ரிஜிஸ்திரார் தமது 1930—31 வருடத்திய அறிக்கையில் கூறியுள்ளார். பீகார்—ஒரிசா மாகாண ரிஜிஸ்திராரும் அம்மாகாணத்திலுள்ள சங்கங்களின் நிலைமையானது சரியாயில்லை என்பதாக தமது 1929—30 வருஷத்திய யாதாஸ்தில் குறிப்பிட்டுள்ளார். இவைகளையெல்லாம் நோக்குமிடத்து நம் நாட்டில் எல்லா இடங்களிலும் இயக்கத்தின் நிலைமை திருப்திகரமாய் இல்லை என்னும் விஷயத்தை யாவரும் மறுக்க முடியாது.

சிலர் கூட்டுறவு இயக்கமே சீர்கெட்டு விட்டதென்றும் பரோபகார சிந்தனையுடன் பாடுபடக்கூடிய பெரியார்கள் இயக்கத்தில் இல்லை என்றும், சண்டை சச்சரவுகளும், சுயநலமும் இயக்கத்தில் குடிகொண்டு விட்டதென்றும், ஆனது பற்றி இயக்கத்தின் அபிவிருத்திக்கான முறையில் பாடுபடவேண்டுமென்பதாகவும் கூறுகின்றனர். சங்கங்களில் மோசடி வழக்குகள் அடிக்கடி ஏற்படுகின்றன. ரிஜிஸ்திரார் தமது அறிக்கையில் 1931—32 வருஷத்தில் சங்கங்களில் 49 கிரிமினல் வழக்குகள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். கூட்டுறவு இயக்கம் அபிவிருத்தி அடைய நாமெல்லோரும் மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் உண்மையாய் இருக்கவேண்டியதென்பது அத்தியாவசியமான விஷயமாகும். ஆனதுபற்றி இயக்கத்தின் அபிவிருத்தியில் மிகவும் கண்ணும் கருத்துமாய் இருக்கும் நாம் நாணயமற்றவர்களையும் தகாதவர்களையும் இயக்கத்திலிருந்து நீக்க ஏற்பாடு செய்யவேண்டும். உலகத்துக்கு ஆற்றக்கூடிய சேவைகளில் கூட்டுறவு இயக்கத்தை மக்களிடை பரப்புவதானது ஒரு மேன்மையான செய்கை என்பதை அநேக கூட்டுறவாளர்கள் அறியாமலிருக்கிறார்கள். சண்டை சச்சரவுகளுக்கும், கட்சி பேதங்களுக்கும், பட்சபாதமான செய்கைகளுக்கும் கூட்டுறவு இயக்கத்தில் யாதொரு இடமும் கிடையாது. சாத்வீகமான இவ்வியக்கமானது மக்களிடை பரவி மென்மேலும் விருத்தி அடைய வேண்டுமாயின் சுயேச்சையானதும், தீர்க்கமானதுமான தணிக்கை அவசியமானது. சர்க்காரும் சங்கங்களை கணக்கு வழக்கில்லாது முடிவு கட்டும் வேலையை நிறுத்தி வைத்துவிட்டு அவைகளை சீர்திருத்தவும் சங்கங்களை ஸ்தாபிப்பதில் முன் ஜாக்கிரதையுடன் வேலைசெய்யவும் ஏற்பாடு செய்யவேண்டும்.

இயக்கத்தில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியை எவ்வாறு தடுக்கலாம் என்பதைப்பற்றி நாம் மிக எளிதில் வாயளவில் கூறிவிடலாம். ஆனால் செய்கையில் அதைச் செய்து காட்ட வேண்டும். சர்க்காரின் மேம்பார்வையானது இருந்து வருவதால் பொது மக்களுக்கு இயக்கத்தில் ஒரு நம்பிக்கை ஏற்பட அனுகூலமாக இருந்து வருகிறது. எனவே, சர்க்கார் இயக்கத்தில் கொண்டுள்ள ஆதிக்யத்தை நிறுத்திக் கொள்ளவேண்டுமென கூறுவதானது சற்றும் பொருந்தாது.

சங்கங்களில் ஏராளமாய் பாக்கி நிற்கும் தவணை கடந்த கடன்களை வசூலிப்பதில் தக்க முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டும். கடன்காரருக்கு வாய்தாவை நீட்டிக்கொடுத்தோ, அல்லது அவசியமாயின் வட்டியில் சகாயம் செய்தோ கடன் தொகைகளை வசூலித்துவிடலாம். சங்கங்களில் அங்கத்தினர்களுக்குக் கொடுக்கும் கடன்களுக்கெல்லாம் அவர்களின் ஆஸ்திப் பொறுப்பு ஸ்டேட்மெண்டுகள்தான் ஆதாரமாய் இருப்பதால் அவைகளைச் சரியான முறையில் வைத்து வரவேண்டும். அங்கத்தினர்களுக்குக் கொடுக்கும் கடன் வட்டி விகிதத்தைக் குறித்து கூட்டுறவு சங்கங்களின் கடன்களை மிகவும் சௌகரியமானதாகச் செய்ய வேண்டும். சங்கங்களின் தணிக்கை வேலையானது மிகவும் மேம்பட்டதாக இருக்கவேண்டும். கூட்டுறவு சங்கங்களை தணிக்கை செய்வதில் நம்மவர்களுக்கு தக்க அனுபவம் வரும் வரையில் சர்க்காரே இவ்வேலையைச் செய்வதானது சாலச்சிறந்ததாகும்.

சங்கங்களை சீர்திருத்துவதாலும், பழைய முறைகளைக் கைக்கொள்ளுவதாலும், இயக்கம் சீர்திருத்தமடைந்து பொது மக்களிடை பரவிவிடும் என்பதற்கில்லை. பொது மக்கள் கூட்டுறவு இயக்கத்தில் நம்பிக்கை வைத்து ஒன்றுபட்டு ஒத்துழைத்தால்தான் இயக்கம் சீர்திருந்த வழியுண்டு. பொது மக்கள் கூட்டுறவுத் தத்துவங்களை செவ்வனே உணர்ந்து ஒன்றுபட்டு உழைக்கவேண்டுமாயின் கல்வியறிவு அவர்களுக்கு அத்தியாவசியமானது. கூட்டுறவுக் கல்வியை மக்களுக்குப் போதிப்பதால், அக்கறையுடன் பாடுபடக்கூடிய கூட்டுறவாளர்கள் அதிகமாவதுடன் இயக்கத்தில் தணிக்கை செய்வதற்கும் பிரசார வேலைக்கும் தேர்ச்சி பெற்ற நபர்கள் அதிகமாவார்கள். மேல் நாடுகளில் இவ்வேலையை அதாவது மக்களுக்குக் கல்வியறிவூட்டும் வேலையை கலாசாலைகள் மேற்கொண்டுள்ளன. இவைகளை கூட்டுறவு ஸ்தாபனங்கள் ஆதரித்து நடத்துகின்றன. மேலும், கூட்டுறவு மேற்படிப்பிற்கு போகின்றவர்களுக்கு பண உதவியும் கொடுக்கப்படுகிறது. ஆனதுபற்றி நம் ராஜதானியிலும் ஒரு கூட்டுறவு மத்திய கல்லூரி ஸ்தாபிக்கவேண்டியது மிக அவசியமாகிறது. சென்னை அரசாங்கத்தாரும் இது விஷயத்தில் சிரத்தை எடுத்துக்கொண்டு சென்னையில் ஒரு மத்திய கல்லூரி ஸ்தாபிக்க ஏற்பாடு செய்திருப்பதானது போற்றத்தக்கது. இனி கூட்டுறவு இயக்கமானது நம் மாகாணத்தில் பல துறைகளிலும் முன்னேற்றமடைய நாம் முயற்சிக்கலாம். சேமித்து வைக்கும் தன்மை, ஒன்றுபட்டுழைத்தல் ஆகிய இக்குணங்கள் நம் மக்களிடையே ஏற்படின் நல்ல வியாபாரத்திற்கும், நல்வாழ்க்கைக்கும், நல்லபடியாக விவசாயம் செய்வதற்கும் அனுகூலமாக இருக்கும். வட்டி குறையவும், கடன் வசதிகளை அதிகப்படுத்தவும் மக்களிடை சேமித்து வைக்கும் பழக்கத்தை விருத்தி செய்யவும் நாம் முயற்சி செய்தால் நம் நாட்டில் லேவாதேவி முறையானது ஒழுங்காக நடைபெறும். பரோபகார சிந்தனை, ஒன்றுபடுதல், பொதுஜன சேவை ஆகிய இவ்வரிய குணங்கள் ஏற்படின் கூட்டுறவு இயக்கத்தை பல்வேறு துறைகளில் பரப்பி சித்திபெற நடத்த மிகவும் சாதகமாக இருக்கும். வீடு கட்டுதல், சாமான்களை கூட்டாக வாங்குதல், விற்பனை செய்தல், கிராமங்களை சீர்திருத்தம் செய்தல், நல்ல மாதிரியான விவசாயத் திட்டங்கள் மூலம் விவசாயத் தொழிலை அபிவிருத்தி செய்தல் ஆகிய இது போன்ற விஷயங்களில் கூட்டுறவு முறையை நாம் கைக்கொள்ளலாம். நம் நாடு ஓர் விவசாய நாடாக இருப்பதால் கூட்டுறவு இயக்கத்தின் மூலம் கிராம வாசிகள் மேம்பட்ட விவசாயம் புரியவும், நவீன முறைகளைக் கைக்கொள்ளவும் ஏற்பாடு செய்யலாம். ஆடுமாடுகள் வளர்த்தல், பால் பண்ணைகள் ஏற்படுத்துதல், முதலியவற்றை கூட்டுறவு மூலம் செய்யலாம். தாழ்த்தப்பட்டோர்கள் எனக்கூறப்படும் மக்களிடையே நமது இயக்கமானது பரவி அவர்களுக்கு நன்மை பயக்கக்கூடியதாய் நாம் ஏற்பாடு செய்ய வேண்டும். மேற்கூறிய இவ்வேலைத் திட்டங்களை சர்க்காரும், கூட்டுறவுத் தலைவர்களும் கலந்து ஒத்துழைத்து பூர்த்தி செய்ய வேண்டும்.

தேசத்தின் முன்னேற்றத்திற்கு கூட்டுறவு இயக்கம்தான் தக்க சாதனமென்பதாக கருதப்பட்டுள்ளது. கூட்டுறவு இயக்கத்தைத் தவிர வேறு எந்த ஒரு இயக்கத்தாலும் ஏழை மக்களை முன்னேற்றமடையச் செய்ய முடியாது. இவ்வியக்கத்தை நல்ல முறையில் ஒழுங்காய் நடத்தினால் மக்களின் வாழ்க்கை நிலை மேம்பாடடையும்; பொருள்களின் உற்பத்திச் செலவு குறையும். மக்களின் வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிந்து ஜனங்கள் மேன்மையடைவார்கள். நம் தேச மக்களின் ஏழ்மையான நிலைமையைப் பற்றி பல கமிஷன்களும், கமிட்டிகளும் குறிப்பிட்டுள்ளன. மக்களின் செல்வ நிலையை செம்மைப்படுத்த வேண்டிய இக்காலத்தில் கூட்டுறவு இயக்கத்தின் அத்தியாவசியத்தை நாம் மறுக்க முடியாது.

நம் தேச மக்களில் 100-க்கு 73 பேர் விவசாயத்தையே ஜீவனமாகக்கொண்டுள்ளனர். விவசாயத் தொழிலில் ஈடுபடுவோர் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகின்றனர். ஆனால் இத்தொழிலில் யாதொருவிதமான அபிவிருத்தியும் ஏற்படவில்லை. கடன் சுமையாலும், பழைய முறையிலேயே விவசாயத் தொழிலை நடத்தி வருவதாலும், விளைபொருள்களுக்குப் போதிய விற்பனை வசதிகள் இல்லாமையாலும் விவசாயிகள் விருத்தியடைய முடியாமலிருக்கிறார்கள். விற்பனை வசதிகளை அதிகப்படுத்திக் கொடுக்க நம் சென்னை மாகாணத்தில் விற்பனை உத்தியோகஸ்தர் நியமிக்க ஏற்பாடு செய்திருப்ப

(24-ம் பக்கம் பார்க்க)

# விவசாயிகளின் நெருக்கடியான நிலைமை

## துயரைப்போக்க சில உபாயம்

### பெரியார் ராமலிங்கம் செட்டியார் பேருரை

மதுரை, ராமனாதபுரம் ஜில்லா எட்டாவது கூட்டுறவாளர் மகாநாட்டிற்குத் தலைமை வகித்த ராவ் பகதூர் டி. ஏ. ராமலிங்கம் செட்டியார் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவு பின்வருமாறு:—

ஐக்கிய சகோதரர்களே!

இம்மகாநாட்டுக்குத் தலைமை வகிக்கும் கௌரவத்தை நீங்கள் எனக்களித்ததற்காக எனது மனமார்ந்த வந்தனத்தை உங்களுக்குச் செலுத்துகிறேன்.

முன்னமேயே நான் இங்கு வந்து இம்மகாநாட்டை நடத்திக்கொடுத்திருக்க வேண்டும். ஆனால் சில அவசர அலுவல்களின் நிமித்தம் நான்வர இயலாமல்போய்விட்டது. எனினும், எனது சௌகரியத்தை அனுசரித்து நீங்கள் இம்மகாநாட்டை ஒத்திவைத்ததானது என்பால் உங்களுக்குள்ள அன்பின் மிகுதியைக் காட்டுகிறது. தமிழ்நாடு கூட்டுறவு பெடரேஷனில் தலைமை வகிப்பதால் நான் தமிழ்நாடு பூராவும் சுற்றுப்பிரயாணம் செய்து நமது தென் இந்தியாவில் கூட்டுறவியக்கம் அடைந்துள்ள நிலைமையைப் பற்றியும், அதன் தேவைகளைப் பற்றியும் நேரில் தெரிந்துகொள்ளக் கடமைப் பட்டுள்ளேன். எனது தேக அசௌகரியத்தையும், பல அலுவல்களையும் முன்னிட்டு நான் இவ்வேலையைச்செய்ய இயலவில்லை. அதற்காக என்னை மன்னிக்குமாறு உங்களையும், தமிழ் நாட்டில் உள்ள மற்ற கூட்டுறவாளர்களையும் கேட்டுக் கொள்ளுகிறேன்.

#### விவசாயிகளின் நிலைமை

சென்ற ஐந்து வருஷங்களாய் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியானது மற்ற தேசங்களுடன் நம் நாட்டையும் மிகவும் பாதித்துள்ளது. விவசாயிகளின் பொருளாதார நிலைமையானது ஏற்கனவே மிகவும் கேவலமடைந்திருக்கும் நம் நாட்டில், தற்கால நெருக்கடியும் ஏற்பட்டதால் அவர்களது நிலைமை பெரிதும் கெட்டுவிட்டது. இக்கஷ்டத்திலிருந்து நாம் இன்னும் மீண்டபாடில்லை. விலைவாசிகள் சென்ற சில மாதங்களாய் சற்று அதிகரித்திருந்தும் அவைகள் இன்னும் பழைய நிலைமைக்கு வரவில்லை. அதிலும் விவசாயிகள் தங்கள் விளைபொருள்களை விற்ற பிறகே விலைவாசிகள் உயர்வு ஏற்பட்டதால், இதன் சௌகரியம் விவசாயிகளுக்குக் கிடைக்காமல், மற்றவர்களுக்குத்தான் கிடைத்தது. திடீரென ஏறியிறங்கி நிற்கும் இந்த விலைவாசி நிரந்தரமாயிருக்குமா என்பதும், மாசூல் காலம் வரையில் இப்படியே நீடித்து இருக்குமா என்பதும், சொல்லுவதற்கில்லை. பருவம் தவறி மழை பெய்திருப்பதால் இவ் வருஷத்திய விளைவும் பாதகமடையும். விலைவாசிகளின் உயர்வும் விளைபொருள்களின் விளைவும் நிச்சயமில்லாமலிருக்கையில் விவசாயிகளின் நிலைமை சீர்திருந்திவிட்டதாக சொல்லிக்கொள்ள முடியாது. பொருளாதாரச் சுணக்கத்தால் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களிலிருந்து முற்றும் தப்பித்துக்கொண்டோம் என்று இன்னும் சொல்லக்கூடவில்லை; இருந்தாலும் நெருக்கடியான நிலைமை சீக்கிரம் விலகக்கூடிய சுபசகுனங்கள் காணப்படுகின்றன.

ஆனால் இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியின் கஷ்டங்களையும் அதன் அடையாளங்களையும் நாம் எளிதில் மாற்றவோ மறக்கவோ முடியாது. விவசாயிகளின் கடன்பளு அதிகரித்துவிட்டது வட்டிகூட செலுத்த சக்தியில்லாதவர்களின் கடன் தொகையானது அபரிமிதமாய் அதிகரித்துள்ளது. நிலங்களின் மதிப்பு தலைகீழாய்ப் போய்விட்டது. விளைபொருள்களின் விலைவாசியும் சமீப காலத்தில் அதிக உயர்வு



அடையும் என்று சொல்லுவதற்கில்லை. இதனால் என்ன ஏற்பட்டிருக்கிறதென்னில், பெரும்பாலான குடியானவர்கள் அவரவர் நில பலங்களை விற்றாலுங்கூட கடனுக்குச் சரிக்கட்ட முடியாமலிருக்கிறது. கடன் கொடுத்தவர்கள் மேல் நடவடிக்கை யெடுத்து அநேக சொத்துக்களை கோர்ட்டு மூலம் ஏலத்துக்குக் கொண்டு வந்துள்ளார்கள். இதுபோன்ற சந்தர்ப்பங்களில், நிலத்துக்கு மதிப்பில்லாததால் கம்மி விலைக்கு ஏலத்தில் விடப்படுகின்றன. இன்ஸால்வென்ஸி கோர்ட்டுகளிலும் மிகவும் வேலை அதிகமாய்ப் போய், ஒவ்வொரு ஜில்லாவிலும் ஏராளமான நிலங்கள் ரிஸீவர்கள் வசத்திலிருந்து விற்பனை செய்யப்படுகின்றன. பழைய பட்டாதார்களிடமிருந்து நிலங்கள் லேவாதேவிக்காரர்கள் கைக்கு மாறுகின்றன. இவர்களுக்கு இந்நிலங்களை உழுது சாகுபடி செய்வதிலோ, இவைகள் இருக்கும் கிராமங்கள் பேரிலோ யாதொரு பற்றுதலும் இல்லை. நிலைமை இவ்வளவு மோசத்துக்கு வந்தும், சர்க்கார் இதை கவனித்து குடியானவர்களுக்குத் தக்கது செய்ய முன்வராமலிருக்கிறார்கள். மற்ற மாகாண சர்க்கார் பரிகாரங்கள் தேடுவதில் தீவிர முயற்சி செய்துவர, நமது சென்னை அரசாங்கத்தார்மட்டும் வாளாவிருப்பதானது அதிசயமாய்த் தானிருக்கிறது.

#### பரிகார முறை

எனக்குத் தோன்றியமட்டில், குடியானவர்களின் கடன் பளுவை ஒரு மிதமான தொகைக்குப் பைசல் செய்து, அப்படிப் பைசல் செய்யப்பட்ட தொகையை மொத்தமாகவோ அல்லது சிறுகச் சிறுகவோ யாதாயினுமொரு ஏஜன்ஸி மூலம் கொடுத்துத்தீர்க்க முற்படாவிடில், அநேக விவசாய மக்கள் கதிமோக்ஷமடைய முடியாது என்பதாகக் கருதுகிறேன். இது விஷயமாய் பற்பலவிடங்களில் பற்பல திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. பவநகர் சமஸ்தானத்தில் குடிகளின் கடனைத்தீர்க்க அந்த அரசாங்கமே விவசாயிகளுக்குக் கடன் கொடுக்க முன்வந்துள்ளது. கொச்சி சமஸ்தானத்திலும் கவர்ன்மெண்டார் டிபென்சர்கள் மூலம் விவசாயிகளின் கடனைத்தீர்த்துவிட்டு அவர்களிடமிருந்து சிறுகச் சிறுக வசூல் செய்துகொள்ளத் தீர்மானித்துள்ளார்கள். இன்னும் சில இடங்களில், சாத்தியப்பட்டமட்டில், நில அடமான பாங்குகள் மூலம் கடன்களைக் கட்ட முயற்சி செய்யப்பட்டு வருகிறது. எந்த ஒரு பரிகாரத் திட்டமும் பயன்படத்தக்கதாயிருக்க வேண்டுமானால், கடன் கொடுத்தவர் கடன் பெற்றவர் ஆகிய இவ்விருவருக்குள் ஒரு சமரசம் செய்து ஒரு குறைவான தொகைக்கு கடன்களை பைசல் செய்யவேண்டும். இது முதலாவதாக கவனிக்கப்படவேண்டிய விஷயமாகும். கடன் சமரஸ போர்டுகள் மூலம் கடன் கொடுத்தவர் கடன் பெற்றவர் ஆகிய இவ்விருவருக்குள் ஒரு சமரசம் செய்துவிட மத்திய மாகாண சர்க்கார் "கடன் சமரசச் சட்டம்" ஒன்று இயற்றியுள்ளார்கள். அம்மாகாணத்தில் கடன் சமரச போர்டுகள் திருப்திகரமாய் வேலைசெய்து வருவதாகத் தெரிகிறது. அச்சட்டத்தை இன்னும் கண்டிப்பானதாயும் கடன் சமரசம் செய்தலை நிர்ப்பந்தமானதாயும் செய்யவேண்டுமென ஆலோசனை கூறப்படுகிறது. நமது சென்னை சட்டசபையிலும் மேற்கூறிய வழிகளைப் பின்பற்றி நான் ஒரு மசோதா கொண்டுவந்துள்ளேன். ஆனால் நமது சென்னை அரசாங்கத்தாரோ, இம்மசோதாவை சட்டசபையில் ஆலோசிக்க வேண்டிய சௌகரியம் செய்ய சிறிதளவாவது முன்வரவில்லை. இது விஷயமாய் சட்டமெம்பரால் கூட்டப்பட்ட மகாநாட்டின் நடவடிக்கைகளை கவனிக்குமிடத்து, சர்க்கார் இம்மசோதாவை எதிர்ப்பார்கள் என்றுகூட எண்ண வேண்டியிருக்கிறது. எனது மசோதாவைப்பற்றி இதுவரை சொல்லப்பட்ட அபிப்பிராயங்களை கவனிக்குமிடத்து இம்மசோதாவானது ரொம்பவும் முன் ஜாக்கிரதையானதெனக் கூறுவேன். இம்மசோதாவை யான் சட்டசபையில் கொண்டுவந்து பதினெட்டு மாதங்கள் ஆகின்றன. மிகவும் அவசரமான விஷயமாயிருந்தும் இன்னும் இதை செலக்ட் கமிட்டிக்கு சிபார்சு செய்ய இயலவில்லை. சென்ற சட்டசபைக் கூட்டத்தில் உத்தியோகப்பற்றற்ற விஷயங்களை கவனிக்க ஒரு நாள் அதிகப்படுத்திக் கொடுக்கும்படி நான் கேட்டேன் ஆனால் அது கொடுக்கப்படவில்லை உத்தியோகப்பற்றற்ற விஷயங்களை ஆலோசிக்க ஒரே ஒரு தினம் தான் ஒதுக்கப்பட்டிருந்ததால்

எனது மசோதாவை கவனிக்க முடியாமல் போய்விட்டது. இதுபோன்ற பரிகாரத் திட்டங்கள் சட்டசபையில் ஆதரவு பெற்று, அனேக எதிர்ப்புகள் இருந்தபோதிலும் நிறைவேறுவதென்றால், சட்டசபையில் ஆதிக்கம் பெற்றிருக்கும் கக்ஷியின் ஆதரவைப் பொறுத்திருக்கிறது. அனேகமாய் எல்லாவிடங்களிலும் மந்திரிமார்களுக்கு வரவேற்புப் பத்திரங்கள் அளித்தபோது அவர்களுடைய கக்ஷியைச் சேர்ந்தவர்களே இம்மசோதாவை ஆதரிக்கும்படி அவர்களைக் கோரியுள்ளார்கள். மந்திரிமார்களும் அவர்களது சகாக்களும் இம்மசோதாவுக்குத் தங்களது பூரண ஆதரவை அளித்து கூடிய சீக்கிரத்தில் இதைச் சட்ட நிருபணமாக்குவார்கள் என நான் நம்புகிறேன்.

## கூட்டுறவு பாங்குகளின் செல்வ நிலை

பொருளாதார நெருக்கடியால் உலகத்தில் எல்லாவிடங்களிலும் ஏற்பட்டுள்ள நிலைமைதான், நம்நாட்டிலும் கூட்டுறவியக்கத்துக்கு இப்போது உண்டாயிருக்கிறது. ஆனால் இதுவரை நெருக்கடியை இயக்கம் சமாளித்து வந்திருப்பதானது சென்னை கூட்டுறவாளர்களுக்கு ஓர் பெரிய கௌரவமாகும். பல ஜில்லாக்களில் தவணை கடந்த தொகைகள் இப்பால் அதிகமாயிருந்தபோதிலும், ஒரு மத்திய பாங்காவது தான் கொடுக்கவேண்டிய வகைக்கு பணம் கொடுக்க இயலாத நிலையை அடைந்ததாகத் தெரியவில்லை. மாகாண பாங்கு, ஜில்லா மத்திய பாங்குகளிடத்து பொதுமக்கள் கொண்டுள்ள நம்பிக்கையானது ஒரு சிறிதும் குறையவில்லை; காலம் செல்லச் செல்ல அதிகமாயிற்றென்றே சொல்லவேண்டும். தினே தினே டிபாஸிட்டு விண்ணப்பங்கள் அதிகமாய் வந்து குவிவதால், மாகாண பாங்கும், ஜில்லா மத்திய பாங்குகளும் டிபாஸிட்டுகள் வாங்குவதை நிறுத்த வேண்டியேற்பட்டுவிட்டது. இப்பாங்குகள் எல்லாம் நல்ல நிலைமையிலேயே இருக்கின்றன. இவைகளின் பண நிலைமையைப்பற்றி எங்கும் அச்சம் இல்லை. உபாய நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருந்த ஸ்ரீ வில்லிப்புத்தூர், ஹாஸ்பெட் பாங்கு பிரதேசங்களிலுங் கூட இத்தகைய நல்ல நிலையேற்பட்டுள்ளது. பிரதம பாங்குகளைப் பொறுத்த மட்டில், பொருள்களுக்கு விலையில்லாததால்தான் அவைகளில் மெம்பர்களின் தவணை கடந்த தொகைகள் அதிகரித்துள்ளன. பழைய நிலைமை ஏற்பட்டு விட்டால் இயக்கம் முன்னைவிட பலப்படும். சிலவிடங்களில் நஷ்டம் ஏற்பட்டாலும் ஏற்படலாம்; இன்னும் சில பிரதேசங்களில் கடன் தொகைகள் சிறுகச் சிறுக, நீண்ட வாய்தாவில்தான் வசூலிக்க முடியும். ஆயினும், இத்தவணை கடந்த தொகைகள் அநேகமாய் வசூலாய்விடும் என்பதில் ஐயம் இல்லை; ஏதாவது சிறிது நஷ்டம் ஏற்பட்டாலும் அவைகளை சமாளித்துக்கொள்ளப் போதிய சக்தி லேவாதேவி பாங்குகளுக்கு இருக்கிறது.

இயக்கத்தை வெகு ஜாக்கிரதையாக நடத்திவரவேண்டுமென்பதாக எங்கும் சொல்லப்பட்டு வந்துள்ள இச்சந்தர்ப்பத்தில், டிபார்ட்மெண்டாருடைய ஆதரவாலும், கூட்டுறவாளர்கள் இயக்கத்தில் தீவிர பற்றுதலுடனும் முன்ஜாக்கிரதையுடனும் பாடுபட்டு வந்ததாலும் வீண் கலவரம் எங்கும் ஏற்படாமல் போயிற்று. அனேக ஜில்லாக்களில் கூட்டுறவியக்கம் கஷ்ட திசையைக் கடந்து விட்டது. மற்ற ஜில்லாக்களிலும் கொஞ்ச காலத்துக்குள் நல்ல நிலைமை ஏற்பட்டுவிடும். இயக்கத்தில் பணக்கஷ்டமானது ஏற்படவில்லை.

சென்ற இரண்டு வருஷங்களாய் நாம் பெற்றுள்ள அனுபவத்திலிருந்து இயக்கத்தின் குறைபாடுகள் இன்னின்னவென்பது தெரிந்து விட்டது. இவைகளை நிவர்த்திக்க அவசரமான நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது மிகவும் அவசியம். கூட்டுறவாளர்களுக்கு மிக முக்கியமாய் வற்புறுத்த வேண்டிய விஷயம் என்னவென்றால், அவர்கள் வேறு எங்கும் போகாமல் கூட்டுறவு ஸ்தாபனங்களிலேயே தங்கள் கடன் தேவைகளைப் பெற வேண்டுமென்பதாகும். முன்னர் கூட்டுறவு இயக்கத்தில் நீண்டகாலக் கடன்கள் கொடுக்க முடியாமல் இருந்தபோது, மெம்பர்கள் வேறு இடங்களில் கடன் வாங்குவதற்கு ஒரு காரணம் இருந்தது. ஆனால் இப்போது அனேகமாய் எல்லா ஜில்லாக்களிலும் நில அடமான பாங்குகள் ஸ்தாபிக்கப்பட்டு அவைகளுக்குக் கடன் கொடுக்க மத்திய நில அடமான பாங்கில் டிபென்சர்கள்மூலம் ஏராளமான பணம் வந்து குவிகிறது. இனிமேற்கொண்டு



இவற்றின் மூலமாவது நீண்டகாலக் கடன்கள் பெறவசதியிருக்கிறது. ஆனதுபற்றி இந்நில அடமான பாங்குகளை நடத்தத் தக்க பொறுப்பு வாய்ந்த கனவான்கள் கிடைப்பின் நமது தேசத்தின் எல்லா பாகங்களிலும் இவைகளை ஸ்தாபித்து விடலாம். நம் நாட்டில், அதிகமாய்க் கடன்படாத நடுத்தர வகுப்பார் இருக்கின்றனர். கூட்டுறவு சங்கங்களால் அவர்களது கடன் பளுவைத் தீர்க்க இயலும். நாம் ஏன் இவர்களை கூட்டுறவு சங்கங்கள் மூலமாயே தங்கள் கடன் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளும்படி செய்யக்கூடாது? இப்படிச் செய்வதானது, இருதிறத்தாருக்கும் அதாவது அங்கத்தினர்களுக்கும் சங்கங்களுக்கும், மிகவும் உதவியாயிருப்பது தவிர, குடியானவர்களும் அவர்களைப் பார்த்து சிக்கனமாயும் பண வரவு செலவில் நேர்மையாயும் இருக்கக் கற்றுக்கொள்வார்கள்.

## விற்பனை வசதி

விளை பொருள்களை கூட்டுறவு முறையில் விற்பனை செய்து கொடுக்க ஏற்பாடு செய்தால், தரகர்கள் நீக்கப்பட்டு சாமான்களுக்கு நல்ல விலையும் சரியான எடையும் அளவும் கிடைத்து விவசாயிகள் நல்ல ஆதாயம் அடைவார்கள். குடியானவர்களுக்கு பணம் அட்வான்சு செய்து தங்கள் மாசூலை விற்பனை சங்கத்தின்மூலம் விற்க வேண்டுமென நிர்ப்பந்தப் படுத்தவும் சௌகரியமேற்படும். இதனால், கிஸ்து முதலிய காலங்களில் விவசாயிகளுக்கு, விலைவாசி குறைவாயிருக்கும்போது தனது விளைபொருள்களை விற்க வேண்டிய நிர்ப்பந்த மேற்படாமலே பணம் கிடைக்க வழியேற்படுகிறது. ஆனதுபற்றி அவன் தனது மாசூலை நல்ல விலை வரும்வரையில் விற்காமல் நிறுத்திவைக்கலாம். இதிலிருந்து என்ன தெரிகிறதென்றால், பண லேவாதேவி செய்ய மத்திய பாங்கு ஒன்று இருந்து, எங்கெந்த ஊரில் சாத்தியப்படுமோ, அங்கெல்லாம் ஊருக்கொரு கூட்டுறவு சங்கமும் நில அடமான பாங்கும் விற்பனை சங்கமும் ஏற்பட்டால் விவசாயிகளின் சகல தேவைகளையும் பூர்த்தி செய்ய மிகவும் உதவியாயிருக்கும். இப்போது இருக்கிறபடி கூட்டுறவு ஸ்தாபனங்கள் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாது வேலை செய்து வருவதானது எனக்குப் பிடிக்கவில்லை. எல்லா கூட்டுறவு ஸ்தாபனங்களும் பரஸ்பர ஒத்துழைப்புடன் ஒன்றுபடாதவரை நமக்கு வேண்டிய சகல சௌகரியங்களையும் அடைய முடியாது. நாம் இது விஷயமாய் ஆலோசனை செய்து இந்த ஸ்தாபனங்களெல்லாம் ஒத்துழைத்து ஒன்றுக்கொன்று உதவியாயிருக்கும்படி ஏற்பாடு செய்ய வேண்டும். பலவகைப்பட்ட ஸ்தாபனங்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம் என்பது எனது அபிப்பிராயம்.

## இரு முக்கிய சட்டங்கள

நமது ராஜதானியில் சமீபத்தில் இரு முக்கிய கூட்டுறவுச் சட்டங்கள் செய்யப்பட்டுள்ளன. ஒன்று, 1932-ம் வருஷத்திய கூட்டுறவுச் சட்டமாகும். இச்சட்டத்தின் மூலம் சங்கங்களின் லேவாதேவி மேற்பார்வை விஷயங்களில் முன்னைவிட அதிகமான அதிகாரங்களும், சங்க நிர்வாகிகள் கெட்ட வழிகளில் பிரவேசிப்பதாயிருந்தால் அவர்களை நீக்கிவிட அதிகாரமும் ரிஜிஸ்திராருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. பின் சொல்லப்பட்ட அதாவது நிர்வாகிகளை நீக்குவதற்கான அதிகாரத்தைப்பற்றி ஆரம்பத்தில் கொஞ்சம் அபிப்பிராயபேதம் இருந்தது. ஆனால் காலக்கிரமத்தில், அனுபவத்திலிருந்து, இவ்விதியேற்படுத்தியதற்குப் போதிய காரணம் இருப்பது தெரிய வந்து மற்ற மாகாணங்களும் இதைப் பின்பற்றிக்கொண்டு வருகின்றன. இப்புதிய சட்டத்தில், கூட்டுறவு சங்க டிக்ரிகளை டிபார்ட்மெண்டு அதிகாரிகளால் நிறைவேற்ற விதியேற்படுத்தப்பட்டிருக்கிறது. கவர்ன்மெண்டாரும் ரிஜிஸ்திராரும் வேண்டிய சிப்பந்திகளை நியமித்து டிக்ரிகள் நிறைவேற்றுவதில் காலதாமதம் ஏற்படாமலும், கஷ்ட நஷ்டங்கள் உண்டாகாமலும் பார்த்துக்கொள்ளுவார்கள் என நம்பப்படுகிறது. மற்றொரு சட்டத்தின் மூலம், மத்திய நில அடமான பாங்குக்கும், பிரதம நில அடமான பாங்குகளுக்கும், பணப் புழக்கம் அதிகமாவதற்கும் கடன் வசூல் விஷயத்திலும் சில சௌகரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. இச்சட்டமானது சமீபத்தில்தான் அமுலுக்கு வந்தது. மத்திய நில அடமான பாங்கால் வெளியிடும் கடன் பத்திரங்களின் அசல் வட்டித் தொகைகளுக்கு, அரசாங்கத்தார் உத்திரவாதமளித்துள்ளார்கள். மத்திய சட்டசபையில் சமீபத்தில் நிறைவேற்றப்பட்ட ஒரு சட்டத்தால் இக்கடன்

பத்திரங்கள் "ட்ரஸ்ட் செக்யூரிட்டிகள்", அதாவது பொதுப் பணத்தைப் போட்டு வைக்கக் கூடிய பத்திரங்களாகக் கருதப்பட்டு விட்டதால் நில அடமான பாங்குகளுக்குத் தேவையான எல்லாப் பணத்தையும் பெறுவதில் இனிமேல் யாதொரு கஷ்டமும் ஏற்படாது. நில அடமான பாங்குகள் அதிகம் ஆக ஆக, அவைகளை மேற்பார்வை செய்வதற்காக நியமிக்கப்பட்ட சப் டிப்டி ரிஜிஸ்திரார்களையும் அதிகப்படுத்த வேண்டியது அவசியமாகிறது. வருங்காலத்தில் விவசாயிகளின் கடன் பளுவை நிவர்த்தி செய்வதில் நில அடமான பாங்குகள் அதிக பங்கு எடுத்துக்கொள்ளப் போவதால், சர்க்காரை அவைகள் உதவி கோருவதானது மிகவும் நேர்மையானதாகும். சென்ற மாதம் நடந்த பிரதம நில அடமான பாங்குகள் மகாநாட்டில் நிதி மந்திரி நிகழ்த்திய சொற்பொழிவிலிருந்து சர்க்கார் நமது வேண்டுகோளை கருணையுடன் கவனிப்பார்கள் என்பதாகத் தெரிகிறது. நமது தேவைகளை சர்க்காருக்கு வற்புறுத்தி நமக்கு வேண்டிய உதவியைச் செய்து கொடுக்க வேண்டியதானது டிபார்ட்மெண்டாருடையவும், அபிவிருத்தி மந்திரியினுடையவும் பொறுப்பாகும்.

## மேம்பார்வை

சென்ற சில ஆண்டுகளாய் ஏற்பட்ட அனுபவத்திலிருந்து சங்கங்களின் மேல் தணிக்கை விஷயத்தில் ஒரு தகுந்த திட்டத்தை நிர்ணயிக்க வேண்டியது மிகவும் அவசரமானது எனத் தெரியவருகிறது. மேற்பார்வை ஏஜன்ஸியும் மாறிக்கொண்டேயிருக்கிறது. சங்கங்களின் எண்ணிக்கை குறைவாயிருந்தபோது டிபார்ட்மெண்டாரே இவ்வேலையைச் செய்து வந்தனர். சங்கங்கள் அதிகமாக, மேற்பார்வை யூனியன்கள் ஏற்படுத்தப்பட்டன. இதன் பின்னர் இவ் யூனியன்களை மேற்பார்வை செய்வதற்காக சில ஜில்லாக்களில் யூனியன்களின் கூட்டமாகிய "பெடரேஷன்கள்" என்னும் ஸ்தாபனங்கள் ஏற்பட்டன. சில ஜில்லாக்களில் இப் பெடரேஷன்கள் நன்றாய் வேலை செய்தன. ஆனால் பெடரேஷனுக்கும் மத்திய பாங்குக்கும் மனஸ்தாபம் ஏற்பட இடம் உண்டாயிற்று. ஆனது பற்றி பெடரேஷன்களை எடுத்து விட்டு ஜில்லா பாங்காரே மேம்பார்வையைச் செய்வது சமீப கால வழக்கமாய் ஏற்பட்டு வருகிறது. இம்மாறுதல் ஏற்படுவதற்கு இன்னொரு காரணமும் உண்டு. முதல் முதலாக ஜில்லா பாங்குகள் தனி நபா பங்குகாரரால் நடத்தப்பட்டு வந்தன. சிறுகச் சிறுக இது மாறுபட்டு இப்போது நம் ராஜதானியில் ஜில்லா பாங்குகளில் சங்கங்களே ஆதிக்கம் கொண்டுள்ளன. ஜில்லா பாங்கின் அமைப்பில் யூனியன்களே மிகுந்த செல்வாக்குடனிருந்ததால், அவைகள் மேற்பார்வை வேலையைச் செய்ய தங்களுக்குள் ஒரு ஏஜன்ஸியை யேற்படுத்திக்கொள்ள விரும்பின், சில பாங்குகளில் இம்மேற்பார்வை வேலையானது ஒரு தனிக்கமிட்டியாரால் செய்யப்பட்டு வருகிறது. இதில் தனி நபர்கள் கலந்து கொள்வதும் தடுக்கப்பட்டுள்ளது. பாங்கு தலைவர் ஒருவரைத் தவிர இக்கமிட்டியிலுள்ள மற்ற அங்கத்தினர்களெல்லாம் யூனியன்களின் பிரதிநிதிகளாகவேயிருக்கவேண்டும். எந்த விதமான மேற்பார்வைத் திட்டம் மேலானது என்பதைத் தீர்மானிக்க வேண்டியது உங்களைச் சேர்ந்ததாகும். நம் ராஜதானியில் கூட்டுறவு சங்கங்கள் நன்றாய் வேலை செய்வதற்கு மேற்பார்வை செய்யவேண்டியதானது முன்னைவிட இப்போது மிகவும் அவசியமானதாயிருக்கிறது. மேம்பார்வை யூனியன்களால், அவைகள் எந்நோக்கத்துடன் ஸ்தாபிக்கப்பட்டனவோ, அந்நோக்கங்களைப் பூர்த்திசெய்ய முடியவில்லை யென்பதாக அடிக்கடி பிரஸ்தாபிக்கப்படுகிறது. சூபர்வைஸிங் யூனியன்களை ஒன்று சேர்திருத்துவது, அல்லது முடிவுகட்டுவது என்னும் விஷயம் தான் ஒரு பிரச்னையாயிருக்கிறது. சென்னை மாகாண யூனியன் தலைவர் திரு. ராமதாஸ் பந்துலு அவர்களுக்கும் மற்றும் சிலருக்கும் யூனியன்களில் நம்பிக்கையில்லை. ஜில்லா பாங்காரே இன்ஸ்பெக்டர்களை நியமித்து சங்கங்களின் மேற்பார்வையை நடத்தலாமென அவர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். மற்றவர்கள், நன்றாய் வேலை செய்யும் இடங்களில் யூனியன்களை நிறுத்திவைக்கலாம் என்றும் அவைகள் சரிவர வேலை செய்யாதவிடங்களில் ஜில்லா பாங்கார் மேற்பார்வை வேலையை மேற்கொண்டு செய்யலாம் என்றும் கூறுகின்றனர். இந்த



அபிப்பிராயத்தை அனுசரித்து மாகாண யூனியனில் ஒரு தீர்மானமும் நிறைவேறியிருக்கிறது. இன்னும் சிலர், ஜில்லாபாங்குகளால் நேராக சங்கங்களை மேற்பார்ப்பது இயலாத காரியம் என்று மேம்பார்வை யூனியன்கள் இருக்கவேண்டியது அவசியம்தானென்றும் கூறுகின்றனர். எங்கேயாவது யூனியன்கள் சரியாய் வேலைசெய்யவில்லையென்றால், அவைகளைத் திருத்தியமைத்து, அவசியமானால், வெளியாட்களை அவைகளுள் கொண்டு வந்தும், அவைகளை நன்றாய் வேலை செய்யும்படி திட்டப்படுத்தவேண்டும். கூட்டுறவு சங்கங்களின் தற்கால நிலையை கவனிக்குமிடத்து, இந்த மேற்பார்வை முறையை ஒரு திட்டமாக்க வேண்டியது மிகவும் அவசியமானது எனத்தெரிகிறது. எல்லா ஜில்லாக்களிலும் ஒரே விதமான பரிகாரத்திட்டத்தைக் கைக்கொள்வதில் எனக்கு நம்பிக்கை கிடையாது. கூட்டுறவியக்கத்தில் ஏற்படும் பிரச்னைகளும், அதன் பரிகாரத்திட்டங்களும் இடத்துக்கு இடம் மாறுபடுகின்றன. ஒரு ஜில்லாவில் ஒருவகைப்பட்ட ஸ்தாபனங்களுக்கு நல்லதாகத் தோன்றுபவைகள் மற்றவைகளுக்கு சௌகரியமாயிருக்காது. ஆனதுபற்றி ஒவ்வொரு ஜில்லாவும் தனித்தனியே ஆலோசித்துத் தங்களுக்குகந்தபடி பரிகாரத்திட்டங்கள் இயற்றிக்கொள்வது நலமென நான் கருதுகிறேன். ஆனால், வீண் தர்க்கவாதங்களிலும் அபிப்பிராய பேதங்களிலும் காலத்தைக்கடத்தாமல் உருவகமான பரிகாரத்திட்டங்களைக் கண்டுபிடித்து உடனே அமுலுக்குக் கொண்டுவரவேண்டுமென நான் எல்லோரையும் கேட்டுக்கொள்ளுகிறேன். கூட்டுறவியக்கத்தின் அபிவிருத்தியானது சங்கங்களை மேற்பார்வை செய்வதற்காக ஏற்படுத்தும் ஸ்தாபனங்களின் யோக்யதாம்சத்தைப் பொறுத்திருக்கிறது என்பதே எனது பரிபூரணமான அபிப்பிராயமாகும். புதிய சங்கங்கள் ஸ்தாபித்து அவைகளின் மேற்பார்வையைச் செய்தும், அவைகளின் வேலை திறமையாய் நடக்கவும் புதிய துறைகளில் அவைகள் வேலை செய்யவும் உதவியாயிருக்க வேண்டியது மேற்பார்வை ஸ்தாபனங்களின் கடமையாகும் என நான் கருதுகிறேன். அவ்வேலைகளை மிகவும் ஊக்கத்துடன் செய்யக்கூடிய ஸ்தாபனங்கள் தேவை. மேற்பார்வை விஷயத்தைப் பொறுத்தமட்டில் இது போன்ற ஸ்தாபனங்களை ஏற்படுத்துவதில் நாம் முயற்சி செய்யவேண்டும்.

கோயமுத்தூர் ஜில்லாவைப் பொறுத்தமட்டில், மேற்பார்வை வேலையை யூனியன்கள் வசம் ஒப்புவித்துவிட்டோம். ஒன்றிரண்டு தவிர மற்றவைகள் எல்லாம் திருப்திகரமாய் வேலை செய்கின்றன. எங்கள் ஜில்லா பாங்கில் மேற்பார்வை விஷயங்களை கவனிக்க ஒரு தனிக்கமிட்டி நியமித்துள்ளோம். அதில் தலைவர் ஒருவரைத் தவிர மற்ற அங்கத்தினர்கள் எல்லோரும் யூனியன் பிரதிநிதியாவார்கள். இதுவரை இம்முறையானது யாதொரு தங்குதடையுமில்லாது நடைபெற்று வந்துள்ளது. மேற்பார்வை வேலையை கவனிக்கவும், யூனியன்களுக்கு உதவி செய்யவும் ஒரு எக்ஸிகியூடிவ் ஆபீசர் நியமிக்கப்பட்டுள்ளார்.

## கூட்டுறவுப் பயிற்சி

கூட்டுறவு இலாகாவினர் இயக்கத்தை நடத்துவதில் எம்மட்டில் பங்கெடுத்துக் கொள்ள வேண்டும் என்பதுபற்றி அபிப்பிராய பேதங்கள் இருந்துவருகின்றன. அதிர்ஷ்டவசமாய் நமது மாகாணத்தில் மற்ற மாகாணங்களைப்போல் இது விஷயமானது அவ்வளவு தீவிரமானதாயில்லை. அகில இந்திய கூட்டுறவு ஸ்தாபனங்களின் மகாநாட்டுக்கு நாங்கள் அமராவதிக்குச் சென்றிருந்தபோது இது விஷயமானது மிகவும் முக்கியமானதாக விவாதிக்கப்படவேண்டுமென மத்திய மாகாணம்-பீகார் கூட்டுறவு இலாகா மந்திரி ஆலோசனை கொண்டுவந்தார். இந்த மாகாணத்தைப் பொறுத்தமட்டில் கூட்டுறவு ஸ்தாபனங்களை உள்ளபடி உத்தியோகப்பற்றற்றவர்களே நடத்திவருகின்றனர். டிபார்ட்மெண்டார் அவைகளின் வேலையில் அவ்வளவாய்த் தலையிடுவதில்லை. கூட்டுறவுப்பிரசாரம், கல்வி முதலிய விஷயங்களில் நாம் நமது சொந்த ஏற்பாடுகளைச் செய்ய நமக்குச் சுதந்திரமிருக்கிறது. மாகாணக் கூட்டுறவு யூனியனுக்கு டிபார்ட்மெண்டிலும், கூட்டுறவு ஸ்தாபனங்களிலும் நியமிக்கப்படும் உத்தியோகஸ்தர்களின் பயிற்சி விஷயமாய் சர்க்காருக்கு அபிப்பிராயங்கூற அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சமீபத்தில் சர்க்கார் கூட்டுறவு இலாகா இன்ஸ்பெக்டர்களுக்கு தனியாய்த் தாங்களாகவே ஒரு பயிற்சி வகுப்பு

வைத்து நடத்த ஏற்பாடு செய்திருப்பதானது முன்னர்செய்துள்ள ஏற்பாட்டிற்கு முரணாயிருக்கிறது. சென்னையில் கூட்டுறவு, பொருளாதாரம் முதலிய கல்வியைப் புகட்ட ஒரு முதல்தரமான ஸ்தாபனம் ஏற்படுத்தி அதை நாளடைவில் கல்லூரியாக மாற்றி சென்னை சர்வகலாசாலையின் கீழ் கொண்டுவரவேண்டுமென்பதை விரும்பியவர்களுள் யானும் ஒருவன். சென்னையில் இப்போது ஏற்படுத்தப்பட்டிருக்கும் கூட்டுறவு பயிற்சி வகுப்பானது பொதுஜன மேற்பார்வையில் விடப்படவேண்டுமென்பது எனது விருப்பம். தங்களது மேற்பார்வையிலேயே சர்க்கார் இக்கல்லூரியை ஆரம்பித்துவிட்டதால் அவர்கள் செய்யக்கூடியது என்னவெனில் இதை மேற்பார்வை செய்ய பிரபல கூட்டாளர்களடங்கிய ஒரு கமிட்டியையாவது நியமிக்கலாம். மத்திய கூட்டுறவுக் கல்லூரியைத் தவிர, சர்க்கார் பொருளுதவி செய்வதாய்ச் சொல்லியிருந்த இடத்துக்கு இடம் மாறி வகுப்புகள் நடத்தும் இரண்டு பயிற்சிக்கூடங்களை சென்னை மத்திய கல்லூரியின் மாதிரியில் அமைக்கும் விஷயமாய் மாகாண யூனியனார் செய்திருந்த வேண்டுகோளுக்கு கவர்ன்மெண்டார் கொண்டுள்ள கருத்தானது திருப்திகரமாயில்லை. மாகாண யூனியனார் செய்யச்சொல்லும் மாறுதல்களுக்கு அவர்கள் கூறும் காரணங்களை கவர்ன்மெண்டார் கவனித்துப் பார்த்து தங்கள் சம்மதத்தைக் கொடுப்பார்கள் என நம்புகிறேன். இதனால், கூட்டுறவு இலாகாவிலும், மற்ற பிரதேச கூட்டுறவு ஸ்தாபனங்களிலும் வேலை செய்வதற்கு தேர்ச்சிபெற்ற தகுதியான ஆட்கள் ஏற்படுவார்கள் என நான் கண்டிப்பாய் நம்புகிறேன்.

## தணிக்கை (ஆடிட்)

எனது அபிப்பிராயத்தில், சங்கங்களின் ஆடிட்டானது பிறர் ஆதிக்கமற்ற ஒரு தனி ஏஜன்சி மூலம் செய்யப்படவேண்டுமென்றும், நம் நாடு இப்போதிருக்கும் நிலைமையில் கவர்ன்மெண்டுதான் சிறந்த ஏஜென்சியாகுமென்றும் நான் முன்னிருந்தே கருதிவந்துள்ளேன். சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்டுவரும் கையாடல், மோசடி, பொய்க்கணக்குகள் எழுதுவது போன்ற அநேக குற்றங்களிலிருந்து, எல்லாக் கூட்டுறவுஸ்தாபனங்களிலும் ஆடிட்டானது மிகவும் கவனத்துடனும் ஒழுங்காகவும் செய்யப்படவேண்டுமென்பது வலியுறுத்தப்பெறுகிறது. ஆடிட் வேலையை கவர்ன்மெண்டார் செய்யமுடியாமல் போய்விட்டால் ஆடிட் யூனியனையோ மாகாண யூனியனையோ இது விஷயத்துக்கு யோசிக்கலாம். இக்கூட்டுறவு இயக்கத்தில் கவர்ன்மெண்டார் முக்கியமாய்ச் செய்யவேண்டிய கடமையானது இந்த ஆடிட் வேலையேயாகும் என நான் எண்ணுகிறேன். கவர்ன்மெண்டு ஆடிட்டானது பொது ஜனங்களிடை ஒரு நம்பிக்கையை உண்டாக்குவதுடன் மிகவும் கண்டிதமாகவும் இருக்கும். அநேக சங்கங்கள் தணிக்கைக் கட்டணம் செலுத்த முடியாமல் இருக்கின்றன. கிராம விவசாயச் சங்கங்களின் பேரில் ஆடிட் பீஸ் விதிக்கக்கூடாது என கவர்ன்மெண்டார் செய்துள்ள ஏற்பாடானது மிகவும் உபகாரமானதாகும். எல்லாக் கூட்டுறவு ஸ்தாபனங்களையும் இலவசமாய் ஆடிட் செய்ய வேண்டியது தங்கள் கடமையென்று கருதவேண்டுமென்றுகூட நான் சர்க்காருக்குக் கூறுகிறேன். இதை அவர்கள் செய்தால் தாங்களே தங்கள் சொந்த ஆடிட்டர்களை நியமித்துக்கொள்வதாக எந்த ஒரு ஸ்தாபனமும் அமளி செய்யாது. அநேக ஆடிட் உத்யோகஸ்தர்கள் மிகவும் சிக்கலான விஷயங்களையும் கவனித்து வேலை செய்யவேண்டியிருப்பதால், அதிக படிப்பும் நல்ல பயிற்சியுமுடைய உயர்தர வகுப்பு ஆடிட்டர்களையே சாத்யமான வரையில் நியமிக்க வேண்டுமென நான் கவர்ன்மெண்டாருக்குக் கூறுகிறேன்.

## வாலிபர்கள் தேவை

நாணய லேவாதேவியல்லாத இதர துறைகளில் இயக்கத்தைப் பரவச்செய்வதில் கவர்ன்மெண்டார் உதவி செய்யாமலிருக்கின்றார்கள். பரம ஏழைகளாகவும் அனுபவ ஆற்றல் அதிகமில்லாத ஜனங்களைக்கொண்ட இந்தியா போன்ற நாட்டில் மிகவும் ஊக்கத்துடன் பாடுபட்டு எந்தெந்த வழிகளில் கூட்டுறவியக்கத்தைப் பரப்ப முடியுமோ அத்துறைகளிலெல்லாம் பரப்பக்கூடிய வாலிபர்களைத் தேர்ந்தெடுத்து நியமிக்க வேண்டியது கவர்ன்மெண்டாரின் கடமையாகும். பொறுப்பு வாய்ந்த பதவிகளுக்குத் தக்க நபர்கள் வேண்டுமென்றால் கிடைப்பதில்லை. அத்தகையவர்களுக்குப் பஞ்சமாயிருக்கிறது.



## சர்க்கார் ஒத்துழைப்பு

விவசாய முறைகளை விருத்தி செய்து அதன் மூலம் அதிக மகசூல் கிடைக்கும்படி ஏற்பாடு செய்தும், விளைபொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கும்படிக்கும், விவசாயிகளுக்கு உபதொழில்கள் ஏற்படுத்திக் கொடுத்து வருமானத்தை அதிகப்படுத்தியும் ஆகிய இன்னோரன்ன சீர்திருத்தங்கள் செய்தால்தான் குடியானவர்களின் நிலையை அபிவிருத்தி செய்யலாம். இவைகளைச் செய்ய கவர்ன்மெண்டாரின் இதர இலாகாக்களின் ஒத்துழைப்பு நமக்கு அவசியமாயிருக்கிறது. கிராம வாழ்க்கையின் பிற்போக்கையும், கிராம மக்களின் கல்வியின்மையையும் நோக்குமிடத்து, தகுந்த ஒன்றுபட்ட பெருமுயற்சி செய்தாலல்லாமல் அபிவிருத்தி ஏற்படுவது என்பதானது முடியாத காரியமேயாகும். தற்சமயம் கவர்ன்மெண்டின் பல இலாகாதாரும் இது விஷயத்தில் தங்கள் பூரண ஒத்துழைப்பை அளிப்பதில்லையென்றும், இவ்வொத்துழைப்பை நிலைநாட்டத்தக்கதொரு ஏற்பாடு செய்தாலன்னியில் ஒரு பிரயோஜனமுமில்லையென்பதாக நான் சட்டசபையிலும் வெளியிலும் அடிக்கடி கூறியுள்ளேன். சர்க்கார் இது சம்பந்தமாய் யாதும் செய்ய முன்வரவில்லை. ஆனதுபற்றி ஆங்காங்கே தனி நபர்கள் செய்யும் முயற்சிகளெல்லாம் சமுத்திரத்தில் பெய்த மழைபோல் பிரயோஜனமற்றுப் போய் விடுகின்றன. உலகத்திலே எங்கு பார்த்தாலும் திட்டமான முறைகளைப்பற்றிப் பேசும்போது, கவர்ன்மெண்டின்கீழ் வேலை செய்யும் உத்தியோகஸ்தர்களை ஒன்றுபடுத்தி அபிவிருத்தித் திட்டங்களைப் பற்றி அவர்களது அபிப்பிராயங்களை அறிய முடியாமலிருப்பதானது மிகவும் விசனிக்கத்தக்கதாகும்.

## இதர துறைகள்

நம் இந்தியாவில் கூட்டுறவியக்கமானது கிராம லேவாதேவியோடு நின்றுவிட்டது. நெசவுச் சங்கங்கள் போன்ற உற்பத்தி விஷயமாயும், உரம் முதலியவற்றை மொத்தமாய் வாங்கும் சங்கங்கள்போன்ற விவசாய சம்பந்தமாயும், விற்பனை சம்பந்தமாயும் ஏற்படுத்தப்பட்ட கூட்டுறவு சங்கங்கள் இதுவரை இந்தியாவில் சரிவர நடைபெறவில்லை. விற்பனை சங்கங்களைப் பொறுத்த மட்டில் சாமான்களை வாங்கிய விலைக்கும் விற்கும் விலைக்குமுள்ள லாபமானது நிர்வாகச் செலவுக்குப் போதியதாயில்லையென்பதாக அனுமானிக்கப்படுகிறது. மேலும் இவைகள் ரொக்கத்துக்கே வியாபாரம் செய்வதால் அநேகர் இவைகளுக்கு வரக்கூடாமல் போய்விடுகிறது. வட இந்தியாவில் ஜனசமூகத்தைச் சீர்திருத்த நல் வாழ்க்கைச் சங்கங்கள் போன்ற ஸ்தாபனங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. நமது ராஜதானியில் நாம் அவைகளை ஏற்படுத்த முற்படவில்லை. இதே நோக்கங்களுடன் போதிய அதிகாரங்களுடன் கிராமப்பஞ்சாயத்துகள் வேலை செய்யும் நம் ராஜதானியில் இச்சங்கங்கள் எம்மட்டில் வேலை செய்ய முடியுமென்பதை நாம் ஆலோசித்துத் தெரிந்துகொள்ளவேண்டும். சமீபத்தில் ஏற்பட்ட கூட்டுறவு இன்ஷ்யூரன்ஸ் சங்கமானது மிகவும் நன்றாய் வேலை செய்துவருகிறது. தக்க மனிதர்கள் இருந்தால் இவைகளெல்லாம் சித்திபெற நடத்த முடியும் என்பது இதனால் தெரிகிறது.

## ஸ்தலஸ்தாபன சச்சரவுகள்

முனிசிபாலிட்டி, ஜில்லா போர்டு போன்ற ஸ்தலஸ்தாபன விவகாரங்கள் நமது கூட்டுறவியக்கத்திலும் வரவர அதிகரித்து வருவதானது நமது இயக்கத்துக்கே ஒரு பெரிய அபாயத்திற்கிடமான விஷயமாகும். தேர்தல் விஷயங்களுக்காகப் பெரிய பெரிய தொகைகள் அநேக சமயங்களில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் கடனாகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஸ்தலஸ்தாபனங்களில் ஏற்பட்டிருப்பது போலவே அநேக ஜில்லா பாங்குகளிலும் கக்ஷிப்பிரதிகக்ஷிகள் ஏற்பட்டுள்ளன. நமது கூட்டுறவியக்கமானது ஒரு பொறுப்பு வாய்ந்த வேலையைச் செய்ய ஏற்பட்டுள்ள இயக்கமாகும்; இதில் கக்ஷிப்பிளவுகள் ஏற்படின் இயக்கத்துக்கே பெரியதொரு கெடுதியை விளைவித்து இயக்கம் அழியும் நிலைமையெய்திவிடும். ஆனதுபற்றி நமது கூட்டுறவு ஸ்தாபனங்களில் இயக்கத்துக்குப் புறம்பான நிகழ்ச்சிகள் ஏற்படாவண்ணம் கூட்டாளர்

கள் மிக ஜாக்கிரதையுடன் பார்த்துக்கொள்வதோடு அவைகள் ஸித்திகரமாய் வேலை செய்து நம் தேச மக்களில் பெரும்பாலோருக்கு நன்மை பயக்கத்தக்கதாய்ச் செய்யவேண்டும். கூட்டுறவு ஸ்தாபனங்களில் ஸ்தாபனங்களுக்காகப் போட்டிகள் ஏற்படுகின்றன. இதனால் கக்ஷிப்பிரதிகக்ஷிகள் ஏற்பட்டு உச்சச்சரவுகள் நீடித்திருக்க இடமேற்படுகிறது. கூட்டுறவியக்கமானது தேச மக்களிடை மிகவும் நன்மையுண்டாக்கத்தக்கதாய் விருத்திக்கவேண்டுமாயின் எல்லோரும் ஒருமனப்பட்டு உழைக்கவேண்டும். ஏன்? அனுபவமேயில்லாதவர்கள் கூட சில சமயங்களில் அதிகாரத்துக்கும் ஆதிக்கத்துக்கும் ஆசைப்பட்டு இயக்கத்தில் புகுந்து [illegible]கிறார்கள். இதுவும் நமது துர் அதிர்ஷ்டமேயாகும். உயர்ந்த ஸ்தானங்களில் இருக்கும் பேர்களால்கூட இயக்கத்துக்கு பாதகம் விளைவிக்கக்கூடிய முறையில் தங்கள் செல்வாக்கை உபயோகப்படுத்துவதாக முறையீடுகள் வெளிவருகின்றன. பெரிய பெரிய ஸ்தாபனங்களில் இருக்கும் செல்வாக்கு வாய்ந்தவர்கள் இதுபோன்ற சந்தேகங்களுக்குக் கூட இடம் கொடுக்காமல் நடந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும்.

## தமிழ்நாடு கூட்டுறவு பெடரேஷன்

தமிழ்நாடு கூட்டுறவு பெடரேஷன் பல நோக்கங்களைக்கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் அது இப்போது, அதனுடைய பல நோக்கங்களுள் ஒன்றாகிய, தமிழ்க்கூட்டுறவு சஞ்சிகையை வெளியிடுதல் வேலையை மட்டும் செய்து வருகிறது இதனுடைய அபிவிருத்தியில் கூட்டுறவு சங்கங்கள் மிகக்குறைந்த அக்கரையை கொண்டுள்ளன. ஒரு மகாநாடு கூட்ட பல தடவைகளில் முயற்சிக்கப்பட்டது. ஏதோ ஒரு காரணத்தால் அவைகளெல்லாம் முடியாமல் போய்விட்டன. இந்த ஸ்தாபனத்தின் விஷயத்தில் நீங்கள் சிரத்தையெடுத்து கூட்டுறவு சங்க மெம்பர்களுக்கும் பொதுவாய் நமது இயக்கத்துக்கும் இதை மிகவும் பயன்படத்தக்கதாய்ச் செய்யவேண்டுமென உங்களை நான் கேட்டுக் கொள்ளுகிறேன். தமிழ்நாடு கூட்டுறவு பெடரேஷன் மூலம் கூட்டுறவாளர்களின் உணர்ச்சியை எவ்வளவு தூரம் தூண்டிவிட உபயோகமாயிருக்கும் என்பதை உன்னிப்பாருங்கள்!

148734

நகை பாங்குகளைப் பொறுத்த மட்டில் இரு விஷயங்கள் பெரிய பிரசினைகளாய் கிளம்பி கிளர்ச்சி ஏற்பட்டுள்ளன. அதாவது, அவைகள் தங்கள் பணங்களை தங்க நகைகள் ஈட்டின் பேரிலும், மாறுதல் கடனுகவும் கொடுக்க அனுமதி கோருகின்றன. இவைகள் சம்பந்தமாய் ஏற்படுத்தப்பட்ட விதிகள் மிகவும் கடினமானதாய் இருக்கின்றன. இது விஷயங்களை திருப்திகரமாய் நடத்த என்ன ஏற்பாடு செய்யவேண்டுமென்பதை கூட்டுறவாளர்கள் ஆலோசித்து தீர்மானிக்கவேண்டும்.

இம் மகாநாட்டிற்குத் தலைமை வகிக்க நீங்கள் என்னை இவ்வளவு அன்புடன் அழைத்ததற்கு உங்களுக்கு மீண்டும் எனது வந்தனத்தைச் செலுத்துகிறேன்.

---

## (தென்நாட்டில் கூட்டுறவு இயக்கம்)

(15-ம் பக்கத் தொடர்ச்சி.)

தானது நாம் விரும்பத்தக்க விஷயமாகும். கூட்டுறவு நாணயச் சங்கங்களை அதிகப்படுத்தி அவற்றின்மூலம் குறைந்த வட்டிக்கு விவசாயிகளுக்குக் கடன் கொடுக்கும்படி ஏற்பாடு செய்யின் அவர்களின் கடன் சுமையைக் குறைக்கலாம். அதுபோலவே, லேவாதேவியல்லாத இதர துறைகளிலும் இயக்கத்தை பரவச் செய்யின் விவசாயிகளின் மற்ற கஷ்டங்களையும் குறைக்கலாம். இதர நாடுகளில், உற்பத்தி, விற்பனை போன்ற விஷயங்களில் கூட்டுறவு இயக்கம் மிகவும் உபயோககரமாயிருந்து வருகிறது. ஏனைய நாடுகளில் கூட்டுறவு இயக்கமானது எல்லாத்துறைகளிலும் விருத்தி அடைந்து பொது மக்களுக்கு மிகவும் உபயோகமானதாக இருந்து வருகிறது. பின்லாந்து தேசத்தில் கூட்டுறவு மூலம் நிலங்களை வாங்குதல், கால்நடைகள் வளர்த்தல், மொத்த விற்பனை, இன்ஷியோரன்ஸ் முதலிய துறைகளில் வேலை செய்யப்படுகிறது. இங்கிலாந்து, பிரான்சு, ஜெர்மனி, ஜப்பான் முதலிய நாடுகளில் இவ்வியக்கம் எல்லாத்துறைகளிலும் பரவியுள்ளது. நம் இந்திய நாட்டிலும் இவ்வியக்கம் எல்லாத்துறைகளிலும் பரவினால் நம் நாடு மேன்மையடையுமென்பது திண்ணம்.